
Laodicean Times
லவோதிக்கேயன் டைம்ஸ்
1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்
தொகுப்பு15 தொகுதி 2 ஏப்ரல் - ஜுன் 2025



R 5561

## விதைத்தலும் அறுவடைசெய்தலும்

### SOWING AND REAPING

ஆதார வசனங்கள் : கலாத்தியர்6:1–10.

**“மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்”–கலாத்தியர்6:7.**

இக்கட்டுரை ஒரு தன்னடக்கத்திற்கான பாடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. தீங்கு விளைவிக்கும் ஊக்கமருந்துகள் மற்றும் போதைப் பொருட்களை விரும்பும் பசிக்கு இணங்குகிறவர்கள், நிச்சயமாக, அந்த பசியார்வத்துக்கு அடிமையாகி, அதற்கேற்ப தங்கள் சொந்த குணலட்சணங்களில் பெலவீனமடைகிறார்கள் என்பது உண்மையே. தங்கள் சொந்த நலனையும் மனுக்குலத்தின் நலனையும் மனதில்கொண்ட நல்ல மனிதர்கள் அனைவரும், தன்னடக்கமின்மையின் அழிவுகளை நிச்சயமாகக் கண்டிக்கவேண்டும். மேலும் சக உயிரினங்களுக்கு உதவிகரமாக இருக்கின்றதும், அவர்கள் பலமான குணாதிசயமுள்ளோராகவும், சமூகத்தின் பயனுள்ள உறுப்பினர்களாகவும் மாற உதவும் எந்த வார்த்தையும் அல்லது உதாரணமும் நிறுத்தப்படக்கூடாது.

இருந்தபோதிலும் தேவனால் நியமிக்கப்பட்ட பரிகாரமாகிய, மேசியாவின் ராஜ்யத்திலன்றி மனுக்குலத்தின் விழுந்துபோன சுபாவத்தின் காரணமாக வந்த பலவீனங்களிலிருந்து முற்றிலுமாக, முழுவதுமாக எதுவும் விடுவிக்கமுடியாது என்பதில் நாம் முழு உறுதியாய் இருக்கலாம். ஆனால் இந்த உறுதிப்பாடு, மனுக்குலத்தின் சிறந்த நலனுக்கான ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளிக்கும்விதமாக, நீதியின் பக்கத்தின்மீதான நமது இடத்தைப் பகிரங்கமாக எடுப்பதை தடுக்கக்கூடாது.

மறுபுறம் சிலர் அங்கீகரிக்கிற உச்சநிலைக்கு செல்லாமல், வேதாகமத்தின் போதனைகளை ஒவ்வொரு பாடத்திலும் கண்டிப்பாகப் பின்பற்றுவோமாக. தற்போது இவ்வழியைப்பின்பற்றி, இப்பாடத்தில் அப்போஸ்தலரின் வார்த்தைகள் ஒருவகையான தன்னடக்கமின்மையை மற்றொன்றைவிட அதிகமாகக் குறிக்கவில்லை என்பதை கவனத்தில் கொள்ளவேண்டியது நமது கடமையாகும். அப்போஸ்தலர் பொதுவான உலகத்திற்கு முகவரியிடவில்லை. குடிபோதையில் இருக்கும் சில ஏழைகளைப்பற்றி பேசுவதைக்கூட அவர் குறிப்பிடவில்லை. இந்த நிருபத்தின் துவக்க வசனங்களில் அவர் அறிவிப்பதுபோல், அர்ப்பணித்திருக்கிற தேவஜனங்களிடத்திலேயே அவர் உரையாற்றுகிறார்.

அப்போஸ்தலர், இந்த அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவர்களை சகோதரர்கள் என்று அழைத்து, பாவத்தின்மீது அனுதாபம் கொள்ளும் காரணத்தினால் அல்ல, மாறாக மாம்ச பலவீனம் அல்லது சாதகமற்ற சூழ்நிலையில், ஒரு தவறில் சிக்கியுள்ள ஏதோ ஒருவகையான பாவத்தில் சிக்கிக் கொண்டிருக்கிற தங்கள் உடன்சகோதரர்கள் எவரையும் எப்படி கையாளவேண்டும் என்று அவர்களுக்கு அப்போஸ்தலர் அறிவுறுத்துகிறார். சபையிலுள்ள ஆவிக்குரிய ஜீவியத்தில் தேறினவர்கள், தவறுசெய்கிற ஒருவரை நீதியின் நிலைமைக்கும் தேவனிடத்தில் ஐக்கியமாகவும் திரும்பக் கட்டுவதற்கு கொண்டுவர தங்களுக்குள் முயற்சிக்கவேண்டும். மாம்சத்தில் அவர்களும் அபூரணர்களே என்பதையும், அவர்களும் சிலசமயங்களில் தங்கள் இருதய நோக்கங்களுக்கு மாறாக, எப்போதாவது தற்செயலாக பாவத்தில் விழக்கூடும் என்று உணர்ந்து, இதை சாந்தமாகச் செய்யவேண்டும்.

இந்த முறையில் அவர்கள், ‘‘ஒருவர் மற்றவருடைய பாரங்களை சுமக்கவேண்டும்’’. மாம்சத்தின் பலவீனங்களுக்கும், பாவத்தின் சூழ்ச்சிகளுக்கும் எதிராகப் போராடுவதில் ஒருவருக்கொருவர் உதவவேண்டும். இந்த வழியில் அவர்கள் கிறிஸ்துவின் பொதுவான பிரமாணத்தை நிறைவேற்றுவார்கள்.

**இம்மாத வெளியீட்டில்**

.. **விதைத்தலும் அறுவடைசெய்தலும் ... 1**
.. ***தூய பேதுரு கோதுமையைப்போல் புடைக்கப்பட்டார் .. 4***
.. ***இயேசு பிலாத்துவினால் விசாரிக்கப்படுதல் ... 6***
.. ***விவேகமுள்ளவன் தன்னை மறைத்துக்கொள்கிறான் ..10***
.. ***தேவதூதர்கள் பாடின பாடலின் நோக்கம் ... 14***

*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

கிறிஸ்துவின் பிரமாணம் என்பது மற்றவர்களுடைய நலன்களுக்காக ஊழியம்செய்வதற்கும், சுய தியாகம் செய்வதற்குமான ஒரு பிரமாணமாகும். ஒரு சகோதரன் தவறுசெய்திருப்பதைக் காண்பவர்கள், வெறுமனே தலையைத் திருப்பி, அந்த சகோதரனை ஆணவத்தோடும் அதிகாரத்தோடும், உன்னைவிட பரிசுத்தமானவன் என்றவிதத்திலும் கண்டிப்பவர்கள், சரீரத்தின் அங்கங்கள் எல்லாரையும் ஆளுகை செய்கிற கிறிஸ்துவின் பிரமாணம் என்ன என்பதைக்குறித்த சரியான புரிதலை இன்னும் அடையவில்லை.

கிறிஸ்துவின் இந்தப் பிரமாணம் அன்பின் பிரமாணம் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகிறார். இந்த அன்பின் பிரமாணத்தால் ஆளப்பட்டு, இயேசு தம் சிநேகிதர்களுக்காக மட்டுமல்ல, தனது விரோதிகளுக்காகவும் தம் ஜீவனைக் கொடுத்தார். ஆகவே இயேசுவின் பின்னடியார்கள் அல்லது சீஷர்கள் என்று தங்களை கூறிக்கொள்ளும் அனைவரும் அதே சிந்தையை, அதே மனப்பான்மையை, அதே ஆவியைக் கொண்டிருக்கவேண்டும். மேலும் அதே அன்பின் பிரமாணத்தைப் பின்பற்ற முற்படவேண்டும். சகோதரர்களை சிரமங்களிலிருந்து விடுவித்து, கர்த்தரிடத்திற்கும் அவரது தரநிலைகளுக்கும் அருகாமையில் கொண்டுவருவதற்கு, ''நாமும் நம் சகோதரர்களுக்காக நம் ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம்''(1யோவான் 3:16) என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

**அதிகப்படியான சுயமரியாதை**

இயேசுவின் உண்மைப் பின்னடியார்கள் எல்லாரையும் தந்திரமாய் பற்றியிருக்கும் ஒரு பெரும் அபாயம் ஆணவம் என்று அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகிறார். அதாவது, தங்களைப்பற்றி உயர்வாக நினைப்பதும், அதனால் சகோதரர்களைப்பற்றி போதுமான அளவு உயர்வாக எண்ணாதிருப்பதும், குறிப்பாக,ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் தடுமாறும் சகோதரர்களைப்பற்றி, இன்னும் தடுமாறாத இந்த நபர் தன்னை உயர்வாக எண்ணுகிற ஆணவம் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார்.

நாம் உண்மையில் ஒன்றுமில்லை, நாம் அபூரணத்தின் கட்டுக்கள் என்பதே நாம் கற்றுக்கொள்ளவேண்டிய முதல்பாடங்களுள் ஒன்றாகும். நம்முடைய சொந்த தகுதியின் பலத்தால் தேவனுக்கு நம்மை ஒப்படைக்கவோ அவரது தயவைப்பெறவோ முடியாது. மேலும் நாம் நம்மை ஏதோ ஒரு நபராக நினைக்கும் அளவுக்கேற்ப, அதே அளவுக்கு தேவனை நாம் பிரியப்படுத்துவதில்லை, மேலும் அவருடைய பார்வையில் யாரும் இல்லை என்பதை நாம் கற்றுக்கொள்ளவேண்டும். எனவே யாராவது தன்னை தேவனுடைய பார்வையில் ஒருவராக நினைத்தால் அத்தகைய நபர் தன்னைத்தானே ஏமாற்றிக்கொண்டு, நல்ல வழியிலான தனது சொந்த முன்னேற்றத்தை தடுக்கிறார். கிறிஸ்துவுக்குள்ளான தேவதயவின்மூலமாகவேயன்றி, தான் ஒன்றுமில்லை, தெய்வீக கண்காணிப்புக்கு தான் தகுதியற்றவன் என்பதை உணரத்தொடங்கவேண்டும்.

ஆகையால் ஒவ்வொருவரும் தன் அயலானையோ அல்லது கிறிஸ்துவுக்குள்ளான தன் சகோதரனையோ நியாயந்தீர்க்கவோ, சீர்திருத்தவோ விரும்புவதற்கு பதிலாக, தன் சொந்த கிரியைகளை சோதித்துப்பார்க்கவேண்டும். தேவ பார்வையில் அவரைப் பிரியப்படுத்த என்ன அறிவித்திருக்கிறாரோ அக்காரியங்களில் எந்தளவு முன்னேறியிருக்கிறோம் என்று தன்னையே கவனமாக ஆராய்ந்து பார்க்கவேண்டும். தன்னிடத்திலுள்ள கோபம், பகைமை, வெறுப்பு, பொறாமை, சண்டை போன்றவற்றை எந்தளவுக்கு அகற்றியிருக்கிறோம் என்றும், எந்தளவுக்கு தேவனுடைய பரிசுத்தஆவியின் கிருபைகளை – அதாவது சாந்தம், தயாளகுணம், பொறுமை, சகிப்புத்தன்மை, சகோதர சிநேகம், அன்பு ஆகியற்றை அணிந்திருக்கிறோம் என்றும் ஆராய்ந்து உறுதிப்படுத்தத் தேடவேண்டும்.

மற்றவர்களுடன் தன்னை எந்த விதத்திலும் அல்லது எந்த அளவிலும் ஒப்பிட்டுப் பார்க்காமல், இவ்வாறு மற்றவர்களிடத்தில் தான் காண்கிற அபூரணங்களால் தன்னை முழுமையாக மதிப்பிடவேண்டும். வேதாகமம் வரையறுத்திருக்கிற இந்த வழிகளில் தான் முன்னேறி வருவதை எந்தளவுக்கு அவன் காண்கிறானோ, அந்த அளவிற்கு அவன் மகிழ்ச்சியடையத் தகுதியானவன். இவ்வழியைப் பின்பற்றுவதன் மூலம் ஒவ்வொருவரும் தன் சொந்த பலவீனங்களைக் கண்டுபிடிக்கத் தேடவும், தன் சொந்த சுமைகளை சுமக்கத்தேடவும், கர்த்தருக்கும் சகோதரர்களுக்கும் மற்றவர்களுக்கும் சுமையாகவோ, நிந்தையாகவோ இராதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

இப்போதனையின்படி, மதகுருத்துவத்திற்கு இடமில்லை. அப்போஸ்தலர் கூறுவதுபோல், ''வேத வசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன், உபதேசிக்கிறவனுக்கு சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்கக்கடவன் அவர்களுக்குக் கிடைத்த எந்த ஆசீர்வாதங்களையும் அல்லது தேவ வசனத்தின் தெளிவான எந்த கருத்துக்களையும் அவர்களிடம் கூறவேண்டும். ஆசிரியரிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெறுபவர்கள், நன்றியுணர்வோடு அல்லது ஒத்துழைப்போடு அல்லது வேறு ஏதாவது வழியில், ஆசிரியரது கற்பிக்கும் பணியை எந்த நன்மையானதும் ஆதாயமளிப்பதுமான முறையிலும் முன்னெடுக்க உதவுவதன்மூலம், அந்த ஆசிரியருக்கு ஈடுசெய்வதற்கான வாய்ப்பை முறையாக தேடலாம் என்றும் அப்போஸ்தலர் அர்த்தப்படுத்தியிருக்கலாம்.

இங்கு ஒரு கொள்கை ஆபத்தில் உள்ளது. தேவன் நீதியின் வழியில் செயலாற்றுகிறார், அவரை வஞ்சிக்கமுடியாது. அவருடைய கண்களானது–இருதயம், நோக்கம் மற்றும் செயல்தூண்டலுக்கான காரணத்தை படித்தறிகின்றன.

வெளித்தோற்றத்தில் சரியானதுபோலவும், உண்மையில் தவறானதாகவும் உள்ள வாதங்கள் மூலம் நம்மை நாம் தற்காலிகமாகக்கூட ஏமாற்றிக்கொள்ளலாம். ஆனால் தேவனை ஒருவரும் ஏமாற்றமுடியாது. விதைப்பதே அறுவடையைத் தரும். அறுவடை செய்தது விதைக்கப்பட்டதன் இயல்பையே பெற்றிருக்கும் என்பது தெய்வீக ஏற்பாட்டின் ஒரு கொள்கையாகும்– கலாத் 6:7.

**கிறிஸ்தவனின் கடினமான பணி**

அப்போஸ்தலர் கூறுகிற இந்த விதைத்தல் மற்றும் அறுவடையில் உலகம் ஈடுபடுவதில்லை. திருச்சபை மட்டுமே அவ்வாறு செய்கிறது. சபையானது, தேவனுடைய குரலைக் கேட்டவர்களால் உருவாக்கப்பட்டு, இயேசுகிறிஸ்துவின்மூலம் அவருடைய சீஷர்களாகிற அனைவருக்கும் பாவமன்னிப்பை வழங்குகிறதோடு, தெய்வீக உதவியையும், புதிய சுபாவத்திற்கான பரிசுத்தஆவியின் ஜெநிப்பிக்குதலையும், கனம் மகிமை சாகாமையையும் வழங்குகிறது. நிஜமாகவும் உண்மையாகவும் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள் அனைவரும் தங்கள் சிலுவையை எடுத்து. குருவின் அடிச்சுவடுகளில் நடப்பதில் சுயத்தை வெறுத்தலின் உடன்படிக்கை செய்தவர்கள்– இவர்கள் மட்டுமே உண்மைக் கிறிஸ்தவர்கள்.

இவர்கள் தங்கள் நடைகளை கர்த்தருடைய வழிநடத்துதல்களுக்கு இசைவாக ஒழுங்குபடுத்திக் கொள்வதும், இயேசுவின் சீஷர்களாக, சுயதியாகம் மற்றும் உண்மைத்தன்மையின் உடன்படிக்கையைப் பின்பற்றுகிற விகிதத்தில், அவர்கள் வாழ்க்கையின் முடிவுகள் இருக்கும் என்பதை அறிந்துகொள்வதும் இவர்களுக்கானதாயிருக்கிறது. இவர்கள் உலகத்தையும் அதன் குறிக்கோள்களையும், அதன் நோக்கங்களையும், அதன் இலட்சியங்களையும் தியாகம்செய்ய உடன்படிக்கை செய்துள்ளதால், இவர்கள், “தேவனுடைய சுதந்திரரும், கிறிஸ்துவுக்கு உடன்சுதந்திரருமாகி, பரலோக உரிமையை அடைவர் – ரோமர் 8:17.

இவர்கள் ஆவிக்கென்று விதைப்பதற்கு ஒப்புக்கொள்வது மட்டும் போதாது, ஆனால் இந்த நோக்கங்களுக்காக விதைப்பதில் அவர்கள் காட்டும் உண்மைத்தன்மையைப் பொறுத்தே ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், இருதய வளர்ச்சியையும் அறுவடை செய்வார்கள் என்பதை இவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். “ஆவிக்கென்று விதைக்கிறவன்” –அதாவது, ஆவிக்குரிய ஜீவியம் ஜீவிப்பவன், தன் வார்த்தைகள், செயல்கள் மற்றும் சிந்தனைகள் எல்லாவற்றிலும் தேவஆவிக்கு அல்லது சித்தத்திற்கு ஊழியம்செய்ய முயற்சிப்பவன் – கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் குணசாயலை அடையும் பல்வேறு பண்புகளில் ஆவிக்குரிய வளர்ச்சியின் மிகப்பெரும் பயிரை அறுவடைசெய்வான்.

மறுபுறம், மாம்சத்துக்கென்று விதைப்பவர்கள், அதாவது மாம்சத்தின்படி ஜீவிப்பவர்கள் தங்கள் சொந்த மாம்சத்தை பிரியப்படுத்த நாடி, தங்கள் நண்பர்கள் அல்லது உறவினர்களது மாம்ச சிந்தைகள் அல்லது மாம்ச சித்தத்தைப் பிரியப்படுத்தத் தேடுகிறவர்கள், இவ்வாறு வளர்க்கப்பட்ட மாம்சம் தங்கள் ஜீவியங்களை கட்டுப்படுத்தும் வல்லமையில் வலுவடையும் என்றும், இவர்கள் ஆவிக்குரிய வழிகளில், விகிதாச்சார அளவில் குறைவான முன்னேற்றமே அடைவார்கள் என்று மட்டுமே எதிர்பார்க்கமுடியும்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நம் விழுந்துபோன சுபாவங்களின் மாம்ச விருப்பங்களுக்கு நாம் கவனம் செலுத்தும் ஒவ்வொரு முறையும், நமது சொந்த ஆவிக்குரிய முன்னேற்றத்தை நாமே தடுக்கிறோம் என்றும், மாம்சத்துக்கு அடிபணியும் அத்தகைய மனப்பான்மை அழிவை நோக்கி, மரணத்தை நோக்கி உள்ளது என்றும் அப்போஸ்தலர் விவரிக்கிறார். மறுபுறம், மாம்சத்தின் விருப்பங்களை எந்தளவு சாகடித்து, கர்த்தரின் ஆவியோடு இணக்கமாக வாழ முயற்சிக்கிறோமோ, அதே விகிதத்தில் நாம் ஆவியில் வலுவாக வளர்வோம், மேலும் தேவன், தம்மீது தங்கள் அன்பையும், நீதியின் கொள்கைகளுக்கு தங்கள் உண்மைத்தன்மையையும் வெளிப்படுத்துபவர்களுக்கு வாக்களித்திருக்கிற ஆவிக்குரிய தளத்தில், நித்திய ஜீவன் பெற ஆயத்தமாவோம்.

மாம்சத்தின்மீது முழுமையான ஆதிக்கத்தை அடைபவர்கள் மட்டுமே கர்த்தரிடத்திலிருந்து எந்த ஆசீரையும் பெறுவார்கள் என்று இது அர்த்தப்படுத்துவதில்லை, ஆனால் நாம் ஆவிக்குரிய காரியங்களைப் பாராட்டுவதை வெளிப்படுத்தாவிட்டால், நாம் அதில் முன்னேறமாட்டோம், நித்திய ஜீவனடைய தகுதியற்றவர்களாகி, அதை அடையமாட்டோம். ஆனால் அதற்கு மாறாக, சத்தியம் மற்றும் நீதிக்கான நம் அன்பையும், அவரை பிரியப்படுத்தும் நம் விருப்பத்தையும், கர்த்தரிடத்தில் நம் நடக்கை வெளிப்படுத்துமானால், அப்படிப்பட்டவர்கள் தங்கள் மாம்சத்தில் எவ்வளவு பலவீனராயிருந்தாலும், நித்திய ஜீவனுக்கு தகுதியுடையோராக அவர் கருதுவார். அவர்கள் உயிர்த்தெழுதலில் பரிபூரண சரீரங்களைப் பெற்றிருக்கும்போது, தெய்வீக ஏற்பாடுகளுக்கு துல்லியமான இணக்கமுள்ளோராய் ஜீவிப்பதில் மகிழ்ச்சியடைவர் என்பதை அவர் அறிந்திருக்கிறார். இவ்வாறு மற்றொரு சந்தர்ப்பத்தில் அப்போஸ்தலர் எழுதினார்; “மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்”(ரோமர் 8:4).

**நன்மைசெய்வதில் உண்மையாய்த் தொடர்வோமாக**

கலாத்தியர் 6:9.10 வசனங்களில் அப்போஸ்தலர் தன் வாதத்தை முடிவுக்குக் கொண்டுவருகிறார். சரியானதைச் செய்ய விரும்பும் அனைவரும், இயேசு மற்றும் அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகள் மூலமாக பரிசுத்தஆவியால் குறிக்கப்பட்ட வழிகளின்படி ஜீவிக்க

விரும்பும் அனைவரும், முழுமையான அர்ப்பணிப்பு செய்வதன்மூலம் நன்றாகத் தொடங்குவது மட்டுமல்லாமல், உண்மையாய்த் தொடரவும் வேண்டும். பாவத்துக்கெதிராக போராடுவதிலும், நீதிக்கு உண்மையாய் இருப்பதிலும் சோர்வடையக்கூடாது.

தேவன் தம் ஜனங்களிடத்தில் குணாதிசயத்தை வளர்க்கவும், நிலைநிறுத்தவும் முயல்கிறார். அவர்கள் சிறிதுகாலம் துன்பப்பட்டு, மாம்சத்தின் பலவீனங்களுக்–கெதிராக சிறிதுகாலம் போராடினபிறகு, ஏற்றவேளையில் அவர்கள் பலனை அறுவடைசெய்வார்கள். தேவன் வாக்களித்திருக்கிற புதிய சரீரங்களை– உயிர்த்தெழுதலின் சரீரங்களை அவர்கள் அடைவார்கள். அப்பொழுது அவர்களுடைய அனைத்து யுத்தங்களும் சோதனைகளும் முடிவுற்றிருக்கும். அடைந்த புதிய சரீரங்களோ, புதிய சித்தத்திற்கு பூரண இணக்கமாயிருக்கும், மேலும் அங்கே இரண்டிற்குமிடையே மோதலுக்கான எந்தக் காரணமும் இருக்காது. அப்பொழுது உலகத்தின் ஆசீர்வாதத்துக்காக கிருபையின் பணி அவர்கள்மூலம் பிரமாண்டமாக முன்னேறும்.

மேலும் அப்போஸ்தலர் கூறுகிறார்; குற்றத்தில் அகப்பட்டவரிடம் நாம் கடுமையாக இருப்பது மட்டுமன்றி, மாம்சத்துக்கு விதைக்காமல் ஆவிக்கென விதைப்போராக நம்மைநாமே காத்துக்கொள்வதும், இந்த நல்ல வழியில் சோர்வடையாமல், ''நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச வீட்டாருக்கும் நன்மை செய்யக்கடவோம்'' (ரோமர் 8:10). அவ்வாறு செய்யும்போது, நாம் நம் பரலோகப்பிதாவின் குணத்தை பிரதியெடுக்கிறவர்களாக இருக்கிறோம். அவரே ஆசீர்வாதத்திற்கு ஊற்றாயிருக்கிறார். அவரிடமிருந்தே தற்கால ஜீவியத்தின்ஆசீர்வாதங்கள் வருகின்றன, நீதியுள்ளோர்மீதும் அநீதர்கள்மீதும், நல்லோர்மீதும் பொல்லார்மீதும் சூரியவெளிச்சத்தையும் மழையும் வருஷிக்கப் பண்ணுகிறார்.

பரலோகப்பிதா ஆசீர்வாதங்களை தொடர்ச்சியாக அளித்துவருவதால், அவருடைய முதிர்ச்சியடைந்த வளர்ச்சியடைந்த பிள்ளைகளாகிய நாம், தயவுகளைத் தேடுவதற்கு பதிலாக, அதே குணசாயலையும் அதே மனப்பான்மையையும், அதே மனதையும் அடைய முயலவேண்டும். அதாவது, எல்லாருக்கும் நன்மைசெய்யும் மனப்பான்மையை, குறிப்பாக கர்த்தருடைய பிள்ளைகள் அனைவருக்கும், விசுவாச வீட்டாருக்கும் ஊக்கத்தோடு நன்மைசெய்ய பேராவல் கொள்ளவேண்டும்.

---

**R 5563**

## பரிசுத்த பேதுரு கோதுமையைப்போல் புடைக்கப்பட்டார்

## ST.PETER SIFTED LIKE WHEAT

ஆதார வசனங்கள் : மாற்கு 14:27–31; 53–56; 66–72.

**“...தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்”– 1கொரிந்தியர்10:12.**

பரிசுத்த பேதுரு பலம் வாய்ந்த குணாதிசயம் கொண்ட மனிதராக, மிகவும் தைரியசாலியாக ஒப்புக்கொள்ளப்பட்டாலும், யோசனையின்றி திடீரென செயல்படுகிறவராய் இருந்தார். ''... அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் ஜனங்கள் உணர்ந்திருந்தார்கள்''(அப் 4:13) என்று கர்த்தருடைய சீஷர்களில் இருவரைப்பற்றி எழுதப்பட்டிருப்பவர்களில் அப்.பேதுருவும் ஒருவராயிருந்தார். ஆகவே சில விஷயங்களில் யூதாஸைக்காட்டிலும் பரிசுத்த பேதுரு குறைந்த அனுகூலத்தையே பெற்றிருந்தார் என்று சொல்லப்படுகிறது. கிறிஸ்துவின் பள்ளியில் இருவரும் சரிசமமான வாய்ப்புக்களை அடைந்திருந்தாலும், இந்த இரு மனுஷர்களது வாழ்க்கையின் முடிவுகள் எவ்வளவு வேறுபட்டிருந்தன! இருவரில் ஒருவர் புறக்கணிக்கப்பட்டு, இரண்டாம் மரணத்துக்கு இறங்கினார், மற்றவரோ சோதனை மற்றும் ஒழுங்குக்குட்படுத்தலின் ஏற்றத்தாழ்வுகளுக்குப்பிறகு, தன் எஜமானோடேகூட, கனம், மகிமை மற்றும் அழியாமையையும், அப்போஸ்தலர்களிலேயே உயர்ந்த ஸ்தானத்தையும் அடைந்தார்.

இப்பாடமானது, நம் கர்த்தருடைய மரண நேரத்தின்போது பரிசுத்த பேதுருவுக்கு வந்த விசேஷ புடைத்தெடுத்தலைப் பற்றி பேசுகிறது. இதைக்குறித்து, இயேசு அவரை முன்எச்சரித்து கூறியதாவது; ''..சீமோனே சீமோனே, இதோ கோதுமையை சுளகினால் புடைக்கிறதுபோல சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்'' –லூக் 22:31.32. பரிசுத்த பேதுருவின் தைரியம் பல தருணங்களில் வெளிப்பட்டது, நிஜமாகவே அவருடைய பலவீனமான நிலையே ஆகும். புடைத்தெடுக்கும் அனுபவங்கள் அவருக்கு முன்பாக இருப்பதை இயேசு முன் எச்சரித்திருந்தும், பரிசுத்தபேதுரு எந்த பயத்தையும் திகிலையும் உணராதவராய் இவையனைத்தையும் பொருட்படுத்தாதிருந்தார் .இதனால் அவர் என்ன செய்திருக்கவேண்டுமோ, அதோடு ஒப்பிடுகையில், விழிப்புணர்வின்றி, ஜெப சிந்தையின்றி இருந்தார். அவரது தன்னம்பிக்கை ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு அவரை செயலற்றவராயிருக்கும்படி இயக்கியது.

அடுத்த நாள் காலைவேளையில் சேவல் கூவும் நேரத்துக்கு முன்னால், இதே பரிசுத்தபேதுரு நம் கர்த்தரை

மறுதலிப்பார் என்று அவரிடம் சொன்னபோது, இது நிச்சயமாகவே தவறு என்று அறிவித்து, தன் எஜமானுக்காக மரிக்கவும் தயாராயிருப்பதாகக் கூறினார். இதே பரிசுத்த பேதுரு, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனின் காதை தன் பட்டயத்தால் துண்டித்தார். பின்பு இயேசுவால் இது குணமாக்கப்பட்டது. இயேசுவை மேசியா என்று திடீர் தூண்டுதலால் முதலாவது அறிவித்ததும் இதே பரிசுத்த பேதுருவே.

ஜனங்கள் தம்மைக் குறித்து என்ன சொல்கிறார்கள் என்று இயேசு சீஷர்களிடம் வினவினார். "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்" என்று இறுதியாக அவர்களிடம் கேட்டார், அதற்கு பரிசுத்த பேதுரு பிரதியுத்தரமாக; "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்றார்(மத் **16:13/16).** இந்த பதிலானது, தேவனோடு ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட உறவில் பரிசுத்த பேதுரு இருப்பதை சுட்டிக் காட்டுவதாக இயேசு மறுமொழி கூறினார். இல்லாவிடில் இந்த அறிக்கையை வெளிப்படுத்தும் அறிவை அவர் அடைந்திருக்கமுடியாது. "இயேசு அவனைநோக்கி: மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என்பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்" என்றார் – மத் 16:17. இதே நேரிய குண இயல்புடைய இவர், பயத்தால் மேற்கொள்ளப்பட்டு, தன் எஜமானரை மறுதலிப்பார், சபிப்பார் என்று யாரால் எண்ணிப்பார்க்க முடியும்!

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பெரும்பாலான எழுத்தாளர்களிடமிருந்து மிகவும் வேறுபட்டவர்களாயிருந்து, எந்த மாற்றமும் செய்யாமலும், மெருகேற்றாமலும், நிச்சயமாகவே முழுமையான சத்தியத்தை பேசியிருந்தார்கள் என்ற கருத்து விரைவாயும் வலுக்கட்டாயமாயும் நம் சிந்தைகளில் பதிகிறது. நிச்சயமாகவே இவ்விஷயத்தில் வேறு எந்த புத்தகமும் வேதாகமத்துக்கு ஒப்பாயில்லை. பெரிய மத உலக அமைப்புக்களையும் பல்வேறு பிரிவினை அமைப்புக்களையும் நிறுவினவர்கள், மிகவும் வேறுபட்ட ஆவியை வெளிப்படுத்தியிருந்தார்கள். அவர்களுடைய ஹீரோக்கள் எல்லோரும் உயர்ந்தவர்களும், உன்னதமானவர்களும், படித்தவர்களுமாய் இருந்தனர். நம் கர்த்தர் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இரவில், பரிசுத்த பேதுரு தன் குருவை மறுதலித்தபோது வெளிப்படுத்தினதைப்போன்ற அவர்களுடைய பலவீனங்களை சுட்டிக்காட்ட, அவர்கள் ஒருபோதும் எண்ணுவதில்லை.

நிச்சயமாகவே, இது நமக்கு வேதாகமத்தின் நேர்மை மீதும் அதன் உண்மைத்தன்மை மீதும் மாபெரும் நம்பிக்கையை அளிக்கிறது. மனிதர்கள் தங்கள் தோல்விகளை வெளிப்படையாகக் கூறுவதும், தங்களை கல்லாதவர்கள் என்று பேசுவதும், சத்தியத்தின் மீதான அவர்களது மாபெரும் நேசத்தையும், மாபெரும் கபடின்மையையும், மாபெரும் தைரியத்தையும் உடையவர்களாயிருந்ததை வெளிப்படுத்துகிறது. அவர்களுடைய சாட்சியம், நிச்சயமாகவே எல்லா அங்கீகாரத்துக்கும் தகுதியானது.

**பரிசுத்த பேதுருவுக்கு நேரிட்ட சோதனை எதிர்பாராதது**

தீய தூண்டுதல்கள் நயவஞ்சகமான வடிவில் வரும். பரிசுத்த பேதுரு பிரதான ஆசாரியனது வேலைக்காரனின் காதை வெட்டின அந்தத் தருணத்தில், அவர் நம் கர்த்தரை மறுதலிக்கும் எண்ணத்துடன் எந்த அனுதாபமும் கொண்டிருந்தார் என்று நாம் கற்பனை செய்யமுடியாது. ஆனால் சூழ்நிலைகளும் உணர்வு நிலையும் மாறிவிட்டன. ஒரு சிறைக்கைதியாக நம் குரு கூட்டிச்செல்லப்பட்டார், அவர் தம் எதிரிகளிடமிருந்து விலகி நடக்க எப்படிப்பட்ட வல்லமையை முன்பு பயன்படுத்தினாலும், அவரது வேலை இன்னும் வராததால், அவரைப்பிடிக்க அவர்களால் கூடாதிருந்தது. தற்போது அவரது வேளை வந்திருந்தபடியால்அந்த வல்லமையை அவர் பயன்படுத்தாதிருந்தார் என்பது தெளிவாகிறது. பரலோகத்தில் நண்பர்கள் யாரும் இல்லாததுபோல தோற்றமளித்து, தன் எதிரிகளிடத்தில் ஒப்புவிக்கப்பட்டு, ஒரு நீதிமன்றத்திலிருந்து மற்றொரு நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட தன் குருவைப் பார்த்த பரிசுத்த பேதுருவை செயலிழக்கச்செய்தது.

அந்த அரண்மனைக்குள் நுழைய, பரிசுத்த யோவானுக்கு முன்பு பரிச்சயமாயிருந்த நபரது செல்வாக்கினால், நீதிமன்றத்துக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டு, தன்னோடு பரிசுத்த பேதுருவையும் அழைத்துச்சென்றார், ஆயினும் அவர்கள் இருவரும் பிரிந்திருந்தனர். பரிசுத்தபேதுரு அரண்மனை முற்றத்தில் இருந்தார். குளிராயிருந்ததால் தன்னை சூடுபடுத்திக்கொள்ள நெருப்பு எரியும் கொள்கலனை அணுகினார். நீதிமன்றத்தின் வெளிச்சத்தில், வீண்பேச்சுபேசும் அரண்மனையின் ஊழியக்காரர்கள் சூழ்ந்திருக்கையில், வேலைக்காரிகளில் ஒருத்தி பேதுருவை கூர்ந்து பார்த்து; "நீயும் நசரேயனுடைய சீஷன் அல்லவா ?" என்று கேட்டாள்.

தன்னை அடையாளங்கண்டதை அறிந்து திகைப்படைந்த பேதுரு, இது எதற்கு வழிவகுக்கும் என்று யோசித்து, இயேசுவைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று உடனடியாக மறுதலித்தார். பின்பு, நீதிமன்ற வளாகத்தின் மற்றொரு பகுதிக்குச் சென்றார், அங்கே ஜனங்கள் குறைவாயிருந்தனர், அது மறைவான பகுதியாயுமிருந்தது. ஆனால் மீண்டும் அவர் கலிலேயன் என்று கண்டறியப்பட்டு, இயேசுவின் சீஷர்களில் ஒருவன் என்று குற்றம் சாட்டப்பட்டார், அக்குற்றச்சாட்டை மீண்டும் அவர் மறுத்தார். அவர் இயேசுவின் சீஷர்களில் ஒருவராயும், கலிலேயனாயுமிருந்தார் என்ற அதே குற்றச்சாட்டு மூன்றாம் முறையும் முன்வைக்கப்பட்டது, அதற்கு பேதுருவின் பேச்சு துரோகியைப்போலிருந்து, மறுபடியும் தன்குருவை அறியேன் என்று மறுத்து, சபிக்கத்தொடங்கினார்.

இது பயங்கரமான செயல் என்று நாம் கூறுகிறோம். இது பயங்கரமாக இருந்ததை பரிசுத்த பேதுரு பின்பு நிச்சயம்

உணர்ந்திருப்பார், அடுத்த நாள் காலைவேளையில் சேவல் கூவத் துவங்கினபோது, கோதுமையை சுளகினால் புடைக்கிறதுபோல் சாத்தான் அவரைப்புடைக்க விருப்பமாயிருந்தான் என்றும், அதன்படி, சேவல்கூவுமுன் தன் ஆண்டவரை மூன்றுமுறை மறுதலிப்பார் என்றும் ஆண்டவர் பேசின வார்த்தைகளை பேதுரு நினைவுகூர்ந்தார். இந்த முழு விஷயமும் நசுக்கும் வேகத்தில் அவர்மீது வந்தன. அவர் தன் மேலங்கியைத் தலையில் சுற்றிக்கொண்டு, இருளுக்குள் வேகமாகஓடி, மனங்கசந்து அழுதார். ஏனெனில் சேவல் கூவின அந்த நேரத்தில், இயேசு அவருக்கு சற்று தொலைவில் கொண்டுவரப்பட்டார்; அவர் இயேசுவைப் பார்த்ததும், குரு தம் கண்களை உயர்த்தி பரிசுத்தபேதுருவைப் பார்த்தார். அது கோபமான பார்வையாயிராமல், பரிவுணர்வு மிக்க பார்வையாயிருந்து, அவரது இருதயத்தை நேரடியாகத் தொட்டது.

பரிசுத்த பேதுருவின் குற்றம் யூதாஸின் குற்றத்தைப் போன்றது அல்ல. தன்னைப் பாதுகாக்க மட்டுமே பேதுரு முயன்றார். தன் குருவுக்கு தீங்கு விளைவிக்கவோ அல்லது அவருக்கு ஆபத்தை விளைவிக்கவோ முயற்சிக்கவில்லை. அதனையடுத்து மரணபரியந்தம் தொடர்ந்து காண்பித்த உண்மைத்தன்மையால் பரிசுத்த பேதுருவின் மனம்வருந்துதலின் முழுமையானது அபரிதமாக சாட்சியளிக்கிறது. அவர் சிலுவையிலறையப்படுவதற்கு தண்டனை விதிக்கப்பட்டதாக பாரம்பரியம் கூறுகிறது. மேலும் முன்பு தனது குருவை மறுதலித்ததை நினைவில் வைத்துக்கொண்டு, தனது கர்த்தர் அடைந்த அதே மரணத்தில் பங்குபெறுவது மிகப்பெரிய கனமாக இருக்கும் என்று உணர்ந்தார், மேலும், அவருடைய சொந்த வேண்டுகோளின்பேரில், அவர் தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டார்.

**கிறிஸ்தவர்கள் அனைவருக்குமான பாடம்**

நம் பாடத்தின் திறவுகோல் வசனம், பரிசுத்த பேதுரு அடைந்த அனுபவங்களின் பாடத்தை எல்லா கிறிஸ்தவர்களுக்குமான குரலாக அளிக்கிறது. ''தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்''. நம் சொந்த மதிப்பீட்டில் நாம் பலவீனமாயிருக்கும்போது, விசுவாசத்தால் நிறைந்தவர்களாக, கர்த்தருடைய கரத்தை விடாப்பிடியாகப் பற்றிக்கொள்ளும்போது, தேவன் தம் நித்திய குமாரன்மூலம் அருளுகிற வல்லமையில் நாம் உண்மையாகவே பலப்படுகிறோம். மற்றொரு பாடமாக, தேவனுடைய பிள்ளைகளுடைய அனுபவங்கள் வேறுபட்டிருந்தாலும், முதலாம் உயிர்த்தெழுதலின் பெரிதான உயர்வுக்கான வழியில் நிற்கிற அனைவரும்,கர்த்தரிடத்திலும், சத்தியத்தின்பேரிலும், சகோதரரிடத்திலுமான அன்பை நிரூபிப்பதற்காகவும், இவையனைத்திலும் தங்கள் உண்மைத்தன்மையை நிரூபிப்பதற்காகவும் கடுமையான புடைத்தெடுத்தல்களை சகிக்க கட்டாயம் எதிர்பார்க்கவேண்டும்.

புடைத்தல்கள் அனுமதிக்கப்பட்டிருப்பது, கர்த்தர் நம்மில் ஆர்வமில்லாதிருப்பதனால் அல்ல, மாறாக இந்த புடைத்தெடுத்தல்கள், சோதனைகள் மற்றும் பரீட்சையில் நிலைநிற்போர் மட்டுமே இராஜ்யத்தின் ஸ்தானங்களுக்கு பொருத்தமானவர்களாக ஆவார்கள் என்பதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது.

---

**R 5570**

## இயேசு பிலாத்துவினால் விசாரிக்கப்படுதல்

## JESUS TRIED BY PILATE

ஆதார வசனங்கள் : மத்தேயு 27:11–26.

**“பிலாத்து அவர்களை நோக்கி: அப்படியானால் கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான்”–மத்தேயு27:22.**

பிலாத்து, யூதேயாவுக்கான ரோம ஆளுநராக, சீசரின் அரசாங்கப் பிரதிநிதியாக இருந்தார். இயேசுவின் மரணத்திற்கு அவரை பெரியஅளவில் குறைகூற நாங்கள் விரும்பவில்லை. அவர் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று எதிர்பார்த்தனரோ, அதன்படி அவர் நடந்துகொண்டார். அவர் யூதேயாவிலிருந்தது, யூத கோட்பாடுகளையோ அல்லது மதரீதியான சர்ச்சைகளையோ தீர்ப்பதற்காக அல்ல, மாறாக யூதேயா ஜனங்களை அமைதலாகவும், ஒழுங்குக்கு உட்பட்டும், ரோமானிய அரசாங்கத்துக்கு கீழ்ப்படிய வைத்திருக்கவே. அந்த தேசத்தின் அமைதல் மற்றும் சமாதானத்துக்கு இணக்கமாக, அவர் நீதியாக ஆட்சி செய்யவேண்டும் என்பது கொள்கையாக இருந்தது. ஆனால் ரோமப்பேரரசின் நலன்களுக்காக எந்த நேரத்திலும் நீதி தியாகம் செய்யப்படவேண்டியிருந்தது. இயேசுவைப்பற்றி பிலாத்து முன்னரே கேள்விப்பட்டிருந்தார் என்றும், தனிப்பட்ட முறையில் அவரை சந்தித்திருந்து, அவரது போதனை குறித்து விசாரித்தார் என்றும் பாரம்பரியம் கூறுகிறது.

இயேசு கைது செய்யப்பட்டதை மறுபரிசீலனை செய்யக்கோரி அவருடைய நண்பர்களும் ஜனங்களும் பொதுவாக கூட்டுறவாய் இருக்கக்கூடும் என்பதனால், ஜனங்களுடைய நடமாட்டம் துவங்குமுன், இயேசு யூத ஆலோசனை சங்கத்தின் முன்பு கொண்டுவரப்பட்டார் என்று நம் முந்தைய பாடம் நமக்குக் காண்பித்தது(R **5560)**. இயேசுவை தலைமையகத்துக்கு விரைவாக கூட்டிச்செல்வதற்கு, பிரதான ஆசாரியரும் ஆலோசனை சங்கத்தின் பிரதிநிதிகளும் அவசரப்படுத்தி, அவருக்கு தீர்ப்பளிக்கும்படி பிலாத்துவிடம் கேட்டனர். இயேசுவின்மீது என்ன குற்றச்சாட்டை வைத்திருக்கிறீர்கள் என்று பிலாத்து அவர்களிடம் கேட்டார். அவன் தீயமனிதன், தண்டனைக்குத் தகுதியானவன், இல்லாவிடில் அவரை குற்றஞ்சாட்ட இங்கு கூடியிருக்கமாட்டோம் என்று அவர்கள் மழுப்பலாக பதிலுரைத்தனர்.

ரோமானிய முறைப்படி, மத அடிப்படையிலான எல்லா சர்ச்சைகளையும் கையாள்வதற்கு, அவர்களுக்கு மிகுந்த சுயாதீனம் இருப்பதாகவும், அவர் யூத மதத்தால் நியமிக்கப்படவில்லை என்றும், எனவே அவர்களே வழக்கை விசாரிக்கலாம் என்றும் பிலாத்து அவர்களுக்கு நினைப்பூட்டினார், இதை நாங்கள் அறிவோம், ஆனால் எங்களுக்கு மரண தண்டனை விதிக்க அதிகாரம் இல்லை என்று ஆசாரியர்கள் பதிலளித்தனர். நிரபராதி மீது பிலாத்து மரண தண்டனை சுமத்தவேண்டும் என்று வேண்டுமென்றே சதிசெய்துகொண்டிருந்த தங்களது அக்கிரமத்தின் ஆழத்தை அவர்கள் வெளிப்படுத்தினர். பின்பு ரோமானிய அரசாங்கத்துக்கு உண்மைத்தன்மை மற்றும் கீழ்ப்படிதலிலிருந்து தேசத்தை திசைதிருப்புகிறார் என்று இயேசுவின்மீது குற்றம்சாட்டத் துவங்கினர். ஜனங்கள் சீசருக்கு வரிசெலுத்தக்கூடாது என்றும், தன்னையே யூத ராஜாவாகிய மேசியா என்றும் கூறுகிறார் என்றும் குற்றஞ்சாட்டினர்.

ரோமானிய ஆளுநரின்முன் இவை கடுமையான குற்றச்சாட்டுக்கள், அதை அவர் கருத்தில் கொள்ளவேண்டிய கட்டாயம் இருந்தது. ஆலோசனைச் சங்க விசாரணையில் இயேசுவுக்கு எதிராக கொண்டுவரப்பட்டவைகளிலிருந்து, ரோம ஆளுநரின் முன்பாக வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் முற்றிலும் வேறுபட்டிருந்ததை நாங்கள் கவனித்தோம். குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்றாலும், இயேசு தன் நியாயத்தை முன்வைக்கவில்லை. தாம் மரிக்கும்வேளை வந்துவிட்டதை அவர் அறிந்தார். தமக்கான தெய்வீகத்திட்டத்தின் ஒரு பகுதியாக இது இருப்பதை அவர் ஒதுக்கிவைக்க முயற்சிக்கவில்லை.

**பிலாத்துவின் முன் இயேசு**

மிகவும் கருணையுள்ள தோற்றமுடைய இவர், ரோமானியப் பேரரசின் நலன்களுக்கு கேடுவிளைவிக்கக்கூடிய ஒரு கலகத்தை எழுப்பமாட்டார் என்று பிலாத்து சந்தேகத்திற்கிடமின்றிஅறிந்து, இயேசுவைப் பார்த்தார். பிரதான ஆசாரியர்களும், சதுசேயரும் பொறாமையினால் தங்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததை பிலாத்து உணர்ந்திருந்ததாக மற்றொரு பதிவு நமக்குக் கூறுகிறது. இந்த மத ஆட்சியாளர்களின் போதனைகளைக் காட்டிலும் இயேசுவின் போதனைகள் ஜனங்களைக் கவர்ந்திருப்பதையும், தங்கள் சொந்த பொறுப்பை தட்டிக்கழிக்க முயலும் நபர்கள், ஒரு இழிவான நியாயமற்ற செயலைச் செய்யும்படி தம்மிடத்தில் கேட்கிறதையும் பிலாத்து உணர்ந்தார்.

இருப்பினும், பிலாத்து நசரேயனிடத்தில் அனுதாபம் காட்டுவதாக காணப்படக்கூடாது. சீசரைவிட வேறொரு ராஜாவைப் பற்றி கூறப்படும் குற்றச்சாட்டுக்களை அவர் இலகுவாக கருதுவதாக தோற்றமளிக்கக்கூடாது. ஆகவே அவர் இயேசுவிடம் ; ‘‘இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களை சாட்டுகிறார்களே, நீ அவைகளைக் கேட்கவில்லையா’’ ஏன் பதிலளிக்காதிருக்கிறாய் ? நீ குற்றவாளியா இல்லையா ? என்றான். இயேசுவோ மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை.

அந்த நாள் பஸ்காவின் ஆரம்பமாக இருந்ததால், பரிசேயரும் சதுசேயரும் அரண்மனைக்குள் நுழைவதைத் தவிர்த்தனர், ஆகவே பிலாத்து அவர்களிடத்திற்குச் சென்றார். பிரதான ஆசாரியர்களிடம் கலந்துரையாடி, அவர்களிடமிருந்து கேட்டபின், பிலாத்து வெளிப்படையாக, ‘‘நீ யூதர்களின் ராஜாவா ? அதை நீ ஒப்புக்கொள்கிறாயா ? என்று கேள்வி கேட்டான். அதற்கு இயேசு பதிலளிக்கும் விதமாக ; ‘‘நீங்கள் என் போதனைகளை அறிந்திருப்பதனாலும் கண்டிருப்பதனாலும் இக்கேள்வி கேட்கிறீர்களா ? அல்லது என் எதிரிகளுடைய கூற்றின் அடிப்படையில் கேள்வி கேட்கிறீர்களா ? என்றார். இயேசுவின் சொந்ததேசத்து பிரதானிகளே அவரை ஒப்புவித்ததை பிலாத்து மறுமொழியாகக் கூறி, அவர்களது இந்த எதிர்ப்புக்கு இயேசு என்ன செய்தார் என்று தற்போது பிலாத்து அறிய விருப்பமாயிருந்தான்.

தம்முடைய இராஜ்யம், இந்த உலகம் – அதாவது இந்த தற்கால யுகம் அல்லது தற்கால முறைமைகளுக்குரியதல்ல என்று இயேசு பதிலளித்தார், ஆகவே அவர் சீசரின் ராஜ்யத்துடன் முரண்படவில்லை. இந்த சமூக அரசாங்கத்திற்கெதிராக இயேசுவோ அவருடைய நண்பர்களோ கலகம் செய்யவில்லை, அவருடையது பூமிக்குரிய ராஜ்யமாக இருந்திருந்தால் அது நடந்திருக்கும் என்ற உண்மையை இது பிலாத்துவுக்கு அளித்தது. அவருடைய ராஜ்யம் எதிர்காலத்துக்குரியதாக அவர் அறிவித்தார். பிலாத்து அதற்கு பதிலுரையாக ; ‘‘நீர் உம்மை ராஜா என்று கூறுகிறீர், ஆதலால் நீர் எங்கேயாவது, எப்போதாவது ஆளுகை செய்வீரா ? என்றான். இயேசு அதற்கு பிரதியுத்தரமாக, ஆம், தாம் ஒரு ராஜா என்றும், இதற்காகவே பிறந்தேன், இதற்காகவே உலகிற்கு வந்தேன் என்றும் கூறினார். அவர் சத்தியத்துக்கு சாட்சியமளிக்கவேண்டும், மேலும் அப்படிப்பட்ட சத்தியவான்கள் மட்டுமே அவரது சாட்சியத்தை மதித்துணரமுடியும்.

‘‘அப்படியா’’ என்று பிலாத்து ஆச்சரியத்தோடு கூறினதுபோலவே, ஒவ்வொருவருடைய கேள்வியும் உள்ளது. சத்தியமாவது என்ன ? ஒருவரும் அறிந்ததாக காணப்படவில்லை. பின்பு அவர் யூதர்களிடம் சென்று ; ‘‘நான் அவரிடம் எந்த குற்றத்தையும் காணவில்லை. அவர் எந்த வகையிலும் சீசருக்கு அல்லது அவரது சட்டங்களுக்கு எதிரான ஒரு குற்றவாளி அல்ல. அவருடைய உரிமை அல்லது சுயாதீனத்தில் நியாயமாய் குறுக்கிடுவதற்கு நான் நடத்தப்படும்படிக்கு அவர் எதுவும் செய்திருக்கவில்லை’’ என்றான்.

இதைக்கேட்ட பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரும், இயேசுவை சிலுவையில் அறையவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்திருந்த தருணத்தில், அவர் அவர்களிடமிருந்து தப்பித்துவிடுவாரோ என்று கலங்கினர். இயேசு கலிலேயா நாடுதொடங்கி இவ்விடம் வரைக்கும் யூதேயா

தேசமெங்கும் உபதேசம் பண்ணி, ஜனங்களை கலகத்துக்கு தூண்டுகிறார் என்றும் அவர்கள் கடுமையாகக் குற்றஞ்சாட்டினர் (லூக் 23: 5). கலிலேயா என்ற வார்த்தையை பிலாத்து கேட்டபொழுது, இந்த மனுஷன் கலிலேயனா என்று விசாரித்து, அவர் ஏரோதின் அதிகாரத்துக்குள்ளானவர் என்றறிந்து, ஏரோதுவினிடத்திற்கு அவரை அனுப்பினான் (லூக் 23:7). அந்த நேரத்தில் தனது அரண்மனைக்கு ஏரோது வந்திருந்தார்.

இயேசுவைக் குறித்து ஆர்வமாயிருந்த ஏரோதுவினிடத்தில் அவர் அனுப்பப்பட்டார். அவர் இயேசுவைப்பற்றி பல விஷயங்களைக் கேள்விப்பட்டிருந்தார். அவர் ஏதாவது அற்புதம் செய்வதைப் பார்க்க ஆவலாயிருந்து, ஏரோது நம் கர்த்தரிடத்தில் பல கேள்விகள் கேட்டாலும் பதில்கூறவில்லை. பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரும் இயேசுவைக் கடுமையாக ராஜாவினிடத்தில் குற்றஞ்சாட்டினர். ஏரோதும் அவருடைய படைவீரர்களும் அவரை நிந்தித்து, பரியாசம்பண்ணி, ஒரு கேலி செய்யப்பட்ட ராஜாவாக மினுக்கான வஸ்திரத்தை உடுத்தி, பிலாத்துவிடம் திருப்பி அனுப்பினார்கள். பிலாத்துவின் இந்த மரியாதைக்குரிய செயலும், ஏரோதுவின் உபசாரங்களும் இருவருக்கும் இடையிலிருந்த பகைமையைக் குறைத்ததால் சிநேகிதரானார்கள்.

**பிலாத்தும் ஏரோதும் கண்டிக்கவில்லை**

இயேசுவை குற்றஞ்சாட்டினவர்களிடத்தில் மறுபடியும் பிலாத்து; "ஜனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனாக இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள், நான் உங்களுக்கு முன்பாக விசாரித்தபோது இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை. உங்களை ஏரோதுவினிடத்திற்கும் அனுப்பினேன், அவரும் இவனிடத்தில் குற்றம் காணவில்லை; மரணத்துக்கேதுவாக இவன் ஒன்றும் செய்யவில்லையே, ஆனபடியால் இவனை தண்டித்து, விடுதலையாக்குவேன் என்றான் –லூக் 23:14–16. இயேசுவின் ஜீவன் காக்கவே அவருக்கு தண்டனை அல்லது கசையடிகொடுக்கப்பட்டு, அவர் படுகின்ற துன்பத்தைக் கண்டு யூதர்கள் சமாதானமடைவர் என்ற எண்ணத்தில் செய்யப்பட்டது.

பஸ்காவை முன்னிட்டு, ஆண்டின் இந்த நேரத்தில் பிலாத்து சிறைக்கைதிகளை விடுவிப்பதை பல சந்தர்ப்பங்களில் செய்திருந்தார். இந்நேரத்தில் திரளான ஜனங்கள் பிலாத்துவை உற்சாகப்படுத்தி, அவர் இன்னும் சில கைதிகளை விடுவிப்பாரா இல்லையா என்று விசாரித்தனர். இந்த தயவுள்ள வாய்ப்பைப் பயன்படுத்தி, இயேசுவை அப்புறப்படுத்தி, பிரதான ஆசாரியர்கள் மற்றும் ஜனங்களின் தலைவர்களிடமிருந்து அவரை விடுவிக்க பிலாத்து யோசித்து ஜனங்களிடம் ; "நான் யூதருடைய ராஜாவை உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்களா"என்று கேட்டார். அதற்கு திரளான ஜனங்கள், தங்கள் மத அதிகாரிகளால் ஈர்க்கப்பட்டு, திருடனாகிய பரபாஸை விடுவிக்கும்படி ஆளுநரிடம் வற்புறுத்த தூண்டினர். பிலாத்து மறுபடியும் அவர்களை நோக்கி : அப்படியானால் யூதருடைய ராஜாவென்று நீங்கள் சொல்லுகிற மேசியாவை நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான்" அவர்களது மத குருமார்களால் ஏவப்பட்ட திரளான கூட்டத்தார், "அவனை சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டுச் சொன்னார்கள்(மாற் 15:13). அதற்குப் பிலாத்து : " ஏன் என்ன பொல்லாப்புச் செய்தான்? மரணத்துக்கேதுவான குற்றம் எதையும் இவனிடத்தில் நான் காணவில்லை. ஆகையால் நான் இவனைத் தண்டித்து, விடுதலையாக்குவேன் என்றான்"(லூக் 23:22). ஆகவே பரிகாசம் செய்யவும் வாரினால் அடிக்கப்படவும் மட்டுமே மனதாயிருந்து, இயேசுவை திரளான ஜனங்களிடம் ஒப்புவித்தார். காத்திருந்த யூதர்களிடம் பிலாத்து: "நான் அவரிடத்தில் எந்த குற்றமும் காணவில்லை என்று நீங்கள் அறியும்படிக்கு, இவனை கசையடியால் தண்டித்து, விரைவில் அவரை வெளியே கொண்டுவருவேன்" என்றான்.

**இயேசுவை விடுவிக்க பிலாத்து செய்த முயற்சிகள்**

இயேசு முட்கிரீடம் சூட்டப்பட்டு, இரத்தாம்பர அங்கி தரித்தவராய் வெளியே வந்தார். பிலாத்து ஜனங்களைப் பார்த்து கூறினார்: "இதோ மனிதன்"(Eccehomo). மரணத்துக்கு ஒப்புவிக்கும்படி என்னை நீங்கள் வற்புறுத்துகிற அவரைப் பாருங்கள். உங்கள் சந்ததியில் அல்லது மனுக்குலத்தில் உன்னதமான மாதிரிகைகளில் ஒருவராயிருக்கிறவர் இதோ. அவரது துக்கத்தில், தாழ்ந்த நிலையில் அவரைப் பாருங்கள். அவருடைய அழகான கண்ணியமுள்ள குணாதிசயத்தைப் பாருங்கள்! அவருக்கு எதிராக என்ன வெறுப்பு உங்களுக்கு இருந்தாலும், அவருடைய பணிவைப் பார்க்கும்பொழுது இப்போது நீங்கள் திருப்தியடைவீர்கள் என்றார். ஆனால் அவர்களோ, "அவரை சிலுவையிலறையும்! சிலுவையிலறையும்! "என்று சத்தமிட்டனர். பிலாத்துவோ பதிலுரையாக, "உங்களுக்கு விருப்பமானால் நீங்களே அவனை சிலுவையிலறையுங்கள்; நானோ அவனிடத்தில் ஒரு குற்றமும் காணவில்லை" என்றார். பின்பு விஷயத்தின் நிஜக் கருத்துக்கு யூதர்கள் வந்தனர், இயேசு தன்னை தேவகுமாரன் என்று பிரகடனப்படுத்தியதை தேவதூஷணமாக எண்ணினது, அவர்களது எதிர்ப்புக்கான நிஜமான காரணமாயிற்று. இதை பிலாத்து கேட்டபொழுது, அதிகமாக பயந்து, இயேசுவிடமே அக்கேள்வியை கேட்டான்: "நீ எங்கிருந்து வருகிறாய்?", அதற்கு பதில் ஏதும்அவர் பெறவில்லை. பின்பு பிலாத்து அவரிடம்; நீ என்னிடம் பேசமாட்டாயா? உன்னை சிலுவையிலறையவும் அதிகாரம் உண்டு, விடுதலை செய்யவும் எனக்கு அதிகாரம் உண்டு என்று அறிவாயா" என்றான். அதற்கு இயேசு, "பரத்திலிருந்து உனக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்னிடத்தில் உனக்கு அதிகாரம் இல்லை. ஆகவே உன்னிடத்தில் என்னை ஒப்புவித்தவனுக்கு பெரிதான பாவம் உண்டு" என்றார். பின்பு பிலாத்து இயேசுவை

விடுவிக்க மீண்டும் சிந்தித்தார், ஆனாலும் அது நகரத்தில் கலவரத்தை ஏற்படுத்தக் கூடுமாதலால், அதை அவரது அலுவலகம் சமாதானத்தோடும் அமைதியாகவும் பாதுகாக்க வேண்டுமென்று அவரைக் கட்டாயப்படுத்தியது. ஆனால் யூதர்களோ : நீர் இந்த மனிதனை விடுவித்தால் நீ சீசரின் நண்பனல்ல, தன்னை ராஜாவாகக் கருதும் ஒவ்வொருவரும் சீசருக்கு எதிராகப் பேசுவார்கள் என்று உரக்க சத்தமிட்டனர். இது பிலாத்துவுக்கு ஒரு சங்கடமான நிலையை ஏற்படுத்தினது. இயேசுவை விடுவிப்பது அவரை சீசரது எதிரியின் ஆதரவாளராக கருதச்செய்யும், ஏனெனில் இயேசுவை அவரது சொந்த தேசத்தாரே குற்றஞ் – சாட்டியிருந்ததால், உண்மையில் பிலாத்துவைத் தவிர அவரைப் பாதுகாக்க யாரும் இல்லை.

பிலாத்துவின் குழப்பத்தை அதிகரிக்கும் வண்ணமாக, இந்த வேளையில் அவரது மனைவியிடமிருந்து ஒரு செய்தி வந்தது. இயேசுவுக்கு எதிரான எந்தக் காரியங்களில் ஈடுபடவேண்டாம் என்று அவரை வலியுறுத்தி, இந்த விஷயத்தில் ஒரு விசேஷ கனவு தனக்கு வந்ததாகவும், அவருக்கு அவள் தெரிவித்திருந்தாள். அவர்களது ஆட்சியாளர்களுக்கு எதிராக மீண்டும் பிலாத்து ஜனங்களைத் தொடர்புகொண்டார். இயேசுவின் உன்னதமான ஆளுமையை அவர்களிடத்தில் காண்பித்து, "இதோ, உங்கள் ராஜா!" என் று கூக்குரலிட்டார். ஆனால் இது ; "அவனை அகற்றுங்கள், அவனை சிலுவையில் அறையும் ! சீசரைத் தவிர வேறு ராஜா எங்களுக்கு இல்லை" என்று கடுமையாகக் கூச்சலிட்ட கூட்டத்தாரை நறுமண தூபமிடுவதாக மாத்திரமே காணப்பட்டது.

பிலாத்து விரக்தியடைந்து, தன் கைகளில் தண்ணீரை ஊற்றி, ஜனங்கள் முன்னிலையில் கழுவி, "இந்த நீதிமானின் இரத்தத்தில் நான் குற்றமற்றவன்! நீங்களே பாருங்கள்" என்றுகூறினார். ஜனங்களோ, "அவனுடைய இரத்தப்பழி எங்கள்மீதும் எங்கள் பிள்ளைகள்மீதும் இருப்பதாக! என்று கூச்சலிட்டனர்.

பதினெட்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக, யூதர்கள் தேவனுக்கு அந்நியர்களாக, தீர்க்கதரிசிகளின்றி, ஆசாரியரின்றி, பாவ நிவாரண பலிகள் இன்றி, ஒப்புரவாக்கும் நாட்களின்றி துன்புற்றிருக்கிறார்கள் அல்லவா !(ஓசியா 3:4,5). ஆனால் அவர்களுடைய அக்கிரமம் மன்னிக்கப்படும் நேரம் சமீபித்திருக்கிறது. அப்பொழுது இஸ்ரயேலின்மீது கர்த்தர் ஜெபத்தின் ஆவியையும், விண்ணப்பத்தின் ஆவியையும் ஊற்றுவார், அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" –சகரி 12:10.

ரோமானியப் பேரரசின் நலன்களுக்கு முரணாயில்லாத எல்லாவற்றிலும், பிலாத்து தன் கடமைக்குக் கட்டுப்பட்டவனாக, ஜனங்களது கோரிக்கைகளுக்கு இணங்கி, இயேசுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்து, திருடனான பரபாஸை அவர்களுக்கு விடுவித்தான்.

**அதே ஆவி மேலோங்குகிறது**

கடந்த 18 நூற்றாண்டுகளில் மனித சுபாவம் மாறிவிட்டதாக நாம் நினைக்கவேண்டாம். மாறாக, இன்றைய சூழ்நிலைகள் ஒரே மாதிரியாக இருப்பதால், சிவில் நீதிபதிகள் அவர்களின் மரணத்தை விரும்பி, சமாதானத்தின் நலன்களுக்காக அது உகந்ததெனக் கருதினால், குறிப்பாக அவர்களுடைய மத ஆட்சியாளர்கள் மற்றும் போதகர்களால் மாசற்றவர்களது பலி கோரப்படுமானால் ஜனங்களது நம்பகத்தன்மையை தாங்கள் தக்கவைத்துக்கொள்வது அவசியம் என்று கருதி, இயேசுவோ அல்லது அவருடைய சீஷர்களோ எந்த நாட்டிலும் கொல்லப்படலாம் என்று நம்புவோமாக!

தேவனுடைய பரிசுத்தவான்கள் சிலருக்கு இதுபோன்ற அனுபவங்கள் வருங்காலத்தில் ஏற்பட்டால் நாம் ஆச்சரியப்படவேண்டியதில்லை. மதத்தின் நலன்களுக்காக என்று அழைக்கப்பட்டு மத ஆட்சியாளர்களால் குரல் கொடுக்கப்பட்டவை இந்த யுகம் முழுவதும் மாசற்றவர்களின் மரணத்திற்கு சமுதாய ஆட்சியாளர்களுடன் நீதியை சீர்குலைக்க வல்லமை வாய்ந்ததாக இருந்துள்ளன என்பதை வரலாற்றின் பக்கங்கள் காட்டுகின்றன.தேவனுடைய ஜனங்களின் பாதை, எல்லா நேரங்களிலும் நம் குருவால் குறியிடப்பட்டதாக இருந்து, தேவசித்தத்துக்கு முழுமையாக விட்டுக்கொடுத்து, அவர் நிமித்தமான எல்லா நலன்களிலும் தேவனுடைய மேற்பார்வையை முழுமையாக உணர்ந்திருந்து, அதன் முடிவுகள் மகா மேன்மையானதும் நித்திய கனமகிமையை உருவாக்கும் என்ற முழு நம்பிக்கை கொள்ளவேண்டும்.

--------

என் தேர்ந்தெடுப்பு உலகம் முழுதும் கேலிசெய்யப்பட்டாலும்

இயேசுவே என் பங்காக இருப்பார்

ஏனெனில் நான் வேறு யாரிலும் பிரியப்படுவதில்லை,

அழகுள்ளவர்களில் மிகுந்த அழகானவர் அவரே

உம் துன்பங்கள், உம் வறுமை, அவமான சிலுவையை

நான் உம்முடன் தழுவிக்கொள்கிறேன்

உலக இன்பங்களைவிட்டு நான் ஓடிப்போகிறேன்

அதன் பொக்கிஷங்களை வெறும் குப்பையாகவே கருதுகிறேன்!"

--------

**R 5571**

## விவேகமுள்ளவன் தன்னை மறைத்துக்கொள்கிறான்

## PRUDENT HIDETH HIMSELF

**"விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்துகொள்ளுகிறான்"–நீதிமொழிகள் 22:3.**

மகா உபத்திரவக் காலத்தின் சோதனைகளுக்கும், கடினங்களுக்கும் தப்பிப்பது கூடுமான காரியமே என்று ஒருவனும் யூகிக்கவேண்டாம். அதன் நிழல் பூமியை மேகமூட்டமாக சூழ்ந்துள்ளது. உன்னதத்திலிருந்து வரும் ஞானத்தைப் பயன்படுத்தி நிலைமையை மேம்படுத்துவதே இந்த திசையில் எதிர்பார்க்கக்கூடிய மிக சிறந்ததாகும். அப்போஸ்தலர் இந்த ஞானத்தை விளக்குகிறார்; "பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும்..." இருக்கிறது என்கிறார். எந்தவொரு நபரும் எவ்விடத்திலும் பரலோக ஞானத்தின் பரிந்துரையைப் பின்பற்றும் அளவுக்குத் தக்கதாக, தேவதயவைப் பெற்றிருப்பார் என்று நாம் நிச்சயித்திருக்கிறோம். மேலும் அவ்வாறு தயவு பெறுபவர்க்கு, "எல்லாம் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது" என்ற உத்தரவாதத்தை உறுதிசெய்கிறது.

எந்தவொரு பெற்றோரும் அல்லது ஆலோசகரும் தன்னுடைய வழிகாட்டுதலுக்கு உட்பட்டவர்களுக்குக் கொடுக்கக்கூடிய மிகவும் மதிப்புமிக்க பாடங்களில் முதலாவது பொன்னான விதி – முழுமையான நீதியை உள்ளத்தில் பதியவைத்தல், இரண்டாவதாக, பொன்னான விதியால் பிரதிநிதித்துவப்படுத்துவது, நீதிக்குக் கூடுதலாக இரக்கம், பரிவு, அனுதாபம், உதவும் மனப்பான்மை ஆகியவற்றின் பாடங்களாக இருக்கவேண்டும். தொடரின் மூன்றாவது பாடம், சாந்தம், தயவு, பொறுமை, நீடிய பொறுமை ஆகியவை இருக்கவேண்டும். நான்காவது பாடம், எல்லாவற்றிலும் சிக்கனமாக இருக்கவேண்டும்.தனக்கு எது தேவையில்லையோ அது வேறு ஒருவருக்குத் தேவை என்றுணர்ந்து, வீணாக்குவதைத் தவிர்ப்பது.

மேற்கூறிய பாடங்களை நம் வாசகர்களுக்குப் பரிந்துரைத்து, அதன்படி அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்றும், அவர்கள் கர்த்தருடைய ஆவிக்குரிய பந்தியில் பரலோக உணவினால் போஷிப்பிக்கப்படுகிறார்கள் என்றும், கர்த்தருடைய வார்த்தைக்கு இணக்கமாக பயிற்றுவிப்பதன் மூலம் தங்கள் குடும்பங்களை ஆசீர்வதிக்க முயல்கிறார்கள் என்ற ஒரு கிறிஸ்தவ அடிப்படையை ஏற்றுக்கொள்ளும்படி கூறுகிறோம்.

நெருங்கிவரும் கடுமையான துயரங்களுக்கு அத்தகைய குணலட்சண ஆயத்தம், எந்தவொரு பெற்றோரும் தனது குழந்தைக்கு விட்டுச்செல்லக்கூடிய சிறந்த சொத்தாகும். உணவுக்காக பத்திரங்களும் பங்குகளும் கிடைக்கப்போவதில்லை, வங்கிக்கணக்குகள் நிச்சயமற்றதாக மாறக்கூடும், மேலும் பணத்தை வைத்திருப்பது கொடூரக்காரர்களுக்கு கொள்ளையடிக்கவும் கொலைசெய்யவும் ஒரு கவர்ச்சியாக மாறக்கூடும். ஆனால் ஒரு நல்ல குணாதிசயம் பறிக்கப்படமுடியாதது. அதை அடைந்திருப்பது, ஓரளவு சமாதானத்தையும் பாதுகாப்பையும், எல்லா விலைக்கும் அப்பாற்பட்ட கர்த்தர் மீதான நம்பிக்கையையும் அளிக்கும்.

கர்த்தருக்கும் அவருடைய ஊழியத்துக்கும் தங்கள் இருதயங்களை, தங்கள் ஜீவியங்களை, தங்களுடையது அனைத்தையும் முழுமையாக அர்ப்பணிக்கவேண்டும் என்று தேவையற்றமுறையில் எவரையும் வற்புறுத்தக்கூடாது என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம். தேவபுத்திரர்களின் ஜீவியங்கள் ஒவ்வொரு விஷயத்திலும், "எல்லா மனிதராலும் வாசிக்கப்பட்டும், அறியப்பட்டும் இருக்கிற நடமாடும் நிருபங்களாக" வேண்டும், குறிப்பாக அவர்களுடைய சொந்த குடும்பத்தினரால். அவர்களுடைய ஜீவியங்கள், கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டதன் முழுமைக்கு மட்டுமல்ல, அதன் விளைவாக ஏற்படும் சமாதானம், மகிழ்ச்சி மற்றும் ஆறுதலுக்கும் சாட்சியமளிக்கவேண்டும். "தேவசமாதானம் உங்கள் இருதயங்களில்ஆளப்படக்கடவது, நன்றியுள்ளவர்களாய் இருங்கள்" (கொலோ3:15). புத்திமதியின் ஒரு வார்த்தைகூட சொல்லாமல், உங்கள் செல்வாக்கின்கீழ் நேரடியாக உள்ள அனைவருக்கும், நீங்கள் ஜீவனுள்ள நிருபங்களாக இருக்கிறீர்கள், அதன் பாடங்கள் வல்லமைமிக்கதாயுள்ளது. கூடுதலாக, பொருத்தமான நேரத்தில், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் அவருடைய வார்த்தையின் செய்தியையும் நீங்கள் முழுமையாக ஏற்றுக்கொண்டதன் மூலமாக, நீங்கள் பெற்ற ஆறுதல், மகிழ்ச்சி, சமாதானம் மற்றும் ஆசீர்வாதத்தையும் அடைந்ததை, உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் அண்டைவீட்டார்க்குத் தெரிவிப்பது சரியாக இருந்து, உங்கள் அன்புக்குரியவர்களும் இதேபோல் ஆசீர்வதிக்கப்படுவதையும், ஆறுதலடைவதையும், ஆவிக்குரிய ரீதியில் குணமடைவதையும் பார்ப்பது, உங்களுக்கு எப்பேர்ப்பட்ட இன்பத்தை அளிக்கும் !

இருப்பினும், உங்கள் பிள்ளைகளும், நண்பர்களும், கர்த்தருக்கு தங்களை வெளிப்படையாக அர்ப்பணிப்பது வெறும் பாசாங்குத்தனமாக இருக்குமானால், அதை தவிர்ப்பதே நல்லது. ஏற்கனவே ஏராளமான பாசாங்குத்தனமான பாவனைக்காரர்கள் உள்ளனர். அவர்கள் கிறிஸ்துவின் நோக்கத்திற்கு தீங்கு விளைவிப்பது மட்டுமல்லாமல், தங்களுக்கும் தீங்கு வருவித்துக்கொள்கிறார்கள். ஏனெனில் பாசாங்குத்தனம், குறிப்பாக கர்த்தரால் வெறுக்கப்படுவதாகவும், பாசாங்குக்காரனுக்கு ஒரு தீர்க்கமுடியாத தடையாகவும் தெரிகிறது. ஆகவே பொருளாதார மற்றும் சமூக விஷயங்களில் மட்டுமல்ல,

குறிப்பாக தேவன் மற்றும் தேவபக்தியைப் பொருத்தவரை நமது செல்வாக்கு எப்போதும் நேர்மையின் பக்கம் இருக்கவேண்டும்.

**நேர்மையானவைகளையும் வழங்குங்கள்**

தேவஜனங்கள் தங்கள் சொந்த குடும்பங்களுக்குத் தேவையானவற்றை வழங்கவேண்டும் என்று அப்போஸ்தலர் வலியுறுத்துகிறார். மேலும் அத்தகைய ஏற்பாடு நேர்மையாக செய்யப்படவேண்டும். அவ்வாறு நேர்மையாக செய்யப்படாவிடில், ஒருபோதும் செய்யப்படக்கூடாது என்றும் அவர் வலியுறுத்துகிறார். தேவையில் இருக்கும் மற்றவர்களுக்கு கொடுப்பதற்காக கர்த்தருடைய பிள்ளைகள், “தங்கள் கைகளால் உழைக்கவேண்டும்” என்று அப்போஸ்தலர் மீண்டும் அறிவுறுத்துகிறார். இந்த அறிவுரைகளை பூமிக்குரிய பொக்கிஷங்களை சேர்ப்பதற்கான –அதாவது பூமிக்குரிய செல்வ வளத்துக்கான பரிந்துரைத்தல்களாக புரிந்துகொள்ளக் கூடாது. கர்த்தருடைய ஜனங்கள் விசுவாசத்திற்கு இசைவாக ஜீவிக்கவேண்டும். பரலோகத்தில் தங்கள் பொக்கிஷத்தைச் சேர்த்துவைக்க வேண்டும். எனவே இம்மைக்குரியவற்றைக் குறித்த இந்த ஆலோசனைகள் செல்வத்தை சேமிப்பதற்கான பரிந்துரைகளல்ல, மாறாக “இவ்வுலகை துஷ்பிரயோகம் செய்யாமல் பயன்படுத்த” மட்டுமேயாகும்.

இந்த கட்டுரையின் ஆதார வசனத்திற்கு இணக்கமாகவும், எதிர்கால சாத்தியக்கூறுகள் பற்றின எங்கள் கருத்துக்களுக்கு ஏற்பவும் நமது வாசகர்களுக்கு சில பரிந்துரைகளை வழங்க நாம் வைத்திருக்கிறோம். கர்த்தருடைய நாளின் அனைத்து பேரழிவுகளும் அடுத்த பதினோரு மாதங்களுக்குள் பூமியைத் தாக்கும் என்று உறுதியாக எங்களுக்குத் தெரியவில்லை என்றாலும், இதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதால், நம் குடும்பங்கள் நம் நண்பர்கள் மற்றும் நமது அயலாரது நலன்களுக்காக, அந்தக் காலத்தின் துயரங்களுக்கு எதிராக சில ஏற்பாடுகளை செய்வதற்கு நமக்கு அனுமதியளிக்கிறது.

உலர்ந்த, சுத்தமான பாதாள அறைகள் அல்லது நல்ல காற்றோட்டமான ஏற்ற இடங்களை வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை சேமித்து வைக்க நாங்கள் பரிந்துரைக்கிறோம். உதாரணமாக பெருமளவு நிலக்கரி, அரிசி, உர்ந்த பட்டாணி, உலந்த பீன்ஸ், உருட்டப்பட்ட ஓட்ஸ், கோதுமை, பார்லி, சர்க்கரை, வெல்லப்பாகு, மீன் போன்றவற்றை சேமித்துவைக்கலாம். உணவுகளின் தரம் மற்றும் ஊட்டச்சத்து மதிப்புகளைப் பராமரித்தலை மனதில் கொள்ளுங்கள். குறிப்பாக ரசங்கள்(Soups) சிக்கனமாயும், ஊட்டமளிப்பதாயும் இருக்கிறது. அடுத்த கோடையின் வெப்பம் துவக்கும்வரை நன்றான இருக்கும். அப்போது கெட்டுப்போவதைத் தவிர்க்க, ஒருவேளை நஷ்டத்திற்கு விற்க நேரிட்டாலும் ....அத்தகைய பொருட்களை அதிகமாக வைத்திருப்பதற்கு பயப்படவேண்டாம். இந்த உணவுக்குவியலை மிகவும் சுயநலமாக அல்ல, மாறாக தேவையில் இருக்கும் யார்ஒருவருக்குமான ஏற்பாடாக எண்ணிக்கொள்ளுங்கள். மேலும் கர்த்தருடைய அருளால், “....குறைச்சலுள்ளவனுக்கு கொடுக்கத்தக்கதாக தனக்கு உண்டாயிருக்கும்படி...” யாராகிலும் உங்கள் வழியில் வரலாம் –எபேசி 4:28.

உனக்கு முன்பாக எக்காளம் ஊதி, உன் ஏற்பாடுகள் மற்றும் நோக்கங்கள் போன்றவற்றை சொல்லாதே. “ உனக்கு விசுவாசம் இருக்கிறதா ? அதை தேவனுக்கு முன்பாக உன்னிடத்தில் வைத்துக்கொள்”. இந்த உணவு சேமிப்பைப் பற்றி உன் சொந்த குடும்பத்தினர் மட்டுமே அறிந்திருக்கவேண்டும், அதை மற்றவர்களிடம் சொல்லக்கூடாது என்ற கடுமையான உத்தரவின்கீழ் அவர்கள் இருக்கவேண்டும். குளிர்காலத்தில் புயல்கள் மற்றும் தாக்குதல்கள் போன்றவற்றின் சாத்தியக்கூறுகளைக் கருத்தில்கொண்டு, பிரதானமான உணவுப்பொருட்களை முன்கூட்டியே சேமித்துவைப்பதன் ஞானத்தை உங்கள் நண்பர்கள் அல்லது அண்டை வீட்டாரிடம் சொல்லுங்கள். உபத்திரவக்காலத்தைக் குறித்து மிகையான விவரங்களுக்குள் செல்ல முயற்சிக்காதே. ஏனென்றால் பெரும்பாலான ஜனங்கள் இந்த விஷயத்தில் குருடர்களாகவும், காதுகேளாதவர்களாகவும் இருக்கின்றனர்.

உங்களிடம் பணம் இல்லையென்றால் கடனில் இந்த கொள்முதல்களைச் செய்யாதிருங்கள். விஷயத்தை விட்டுவிட்டு அதிக விசுவாசத்தோடு இருங்கள். ஆனால் பொன்னான விதி என்பது, கர்த்தருடைய ஜனங்களால் அங்கீகரிக்கக்கூடிய மிகக் குறைந்த தரநிலை என்பதையும், அது எந்தவகையான தர்மத்துக்கும் முன்னதாக வருகிறது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

––––––––

உபத்திரவங்கள் தாக்கினாலும் ஆபத்துக்கள் அச்சுறுத்தினாலும்

நண்பரனைவரும் தோற்றாலும், எதிரிகளெல்லாரும் ஒன்றுபட்டாலும்,

என்னநேர்ந்தாலும், ஒன்று மட்டும் நம்மைப் பாதுகாக்கிறது,

“கர்த்தர் வழங்குவார்” என்ற வாக்குறுதி நமக்கு உறுதியளிக்கிறது

சாத்தான் நம் பாதையைத் தடுத்து, அச்சங்களால் நிரப்புவதாக தோன்றுகையில்

விசுவாசத்தால் நாம் வெற்றிபெறுகிறோம்

அவன் அடிக்கடி முயற்சித்தாலும் நம்மிடமிருந்து பறிக்கமுடியாதது

இருதயத்தை உற்சாகமூட்டும் வாக்குறுதியை – “கர்த்தர் வழங்குவார்”

வாழ்க்கை வேகமாக மூழ்கி, மரணம் நெருங்கும்போது,

அவருடைய கிருபையின் வார்த்தை நம்மைத் தேற்றுகிறது;

கிறிஸ்து நம் பக்கம் இருப்பதால் பயம் சந்தேகம் வேண்டாம்

“கர்த்தர் வழங்குவார்” என்ற உறுதியான உணர்வில் நாம் மரிப்போம்!

–––––

**R 5572**

## ஆவலைத்தூண்டும் கடிதம்

## AN INTERESTING LETTER

### நம் சார்பாக இருக்கிறவர் பெரியவர்

அன்பு சகோதரர்களே,

கன்வென்ஷன் முடிவுற்றபிறகு, அட்லாண்டா பட்டணத்திலிருந்து புறப்பட்டுச்செல்லும்போது நடந்த ஒரு கடின அனுபவத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இரயில் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே நான் சத்திய பிரசுரங்களை வழங்குவதற்காக ரயில்பெட்டியின் பின்புறம் சென்றேன். நான் பெட்டியின் முனையை அடையும்வரை கிட்டத்தட்ட அனைவரும் பிரசுரங்களை ஏற்றுக்கொண்டனர். நன்கு தோற்றமளித்த ஒரு மனிதருக்கு வழங்கினபோது அவர் மறுத்து, என்னை வன்முறையில் பேச துவங்கி, ரஸ்ஸலின் பேய்த்தனமான செய்தியுடன் எந்த தொடர்பும் வைக்க விரும்பவில்லை என்று கூறினார். ரஸ்ஸலைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும், புருக்ளினில் வசித்துவந்தேன், அவரது புத்தகங்களையும் தி வாட்ச் டவரையும் படித்தேன், "அவதூறு வழக்கை" பற்றி எல்லாம் தெரியும் என்று கூறினார். எங்களைச் சுற்றியுள்ள அனைவரும் அவர் பேசுவதை கேட்குமளவு அவர் சத்தமாய்ப் பேசினார். அப்பெட்டியில் பிரயாணம் செய்த அனைவரின் கவனமும் எங்களிடம் இருப்பதைக் கண்டேன். அவர் நம் அன்பு போதகரையும், அவரது அனைத்து சீஷர்களையும் அவதூறாக சீறிப் பேசினபோது, நான் என் இருதயத்தை தேவனிடத்தில் உயர்த்தி என்னை இயக்கும்படி வேண்டினபிறகு, நான் பேசுவதற்கு போதுமானஅளவு அவர் சாந்தமடையும்வரை அமைதியாகக் காத்திருந்தேன். நான் அவரிடத்தில் ; "ஐயா! நீங்கள் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள். சகோ. ரஸ்ஸலைப் பற்றி நீங்கள் கூறிய அனைத்தும் சாத்தானைப்போலவே கீழ்த்தரமானவையும், பொய்யுமாயிருக்கிறது. அவரைக்குறித்து நீங்கள் அறிவீர்கள். மேலும் ரஸ்ஸலுடைய போதனைகளில் நீங்கள் தவறு கண்டுபிடிக்கவோ அல்லது வேத வசனங்களைக் கொண்டு அவரை எதிர்த்துப் போராடவோ முடியாததால், நீங்கள் அவருடைய முதுகுக்குப் பின்னால் அவரது குணத்தை அவதூறுபண்ண முயற்சிக்கிறீர்கள்"என்று கூறினேன்.

அவர் பதிலுரையாக, "நான் பேப்டிஸ்ட் சபை ஊழியக்காரன், ரஸ்ஸல் மற்றும் அவருடைய வழிமுறைகளைப் பற்றிய எல்லாவற்றையும் அறிவேன்; மேலும், இந்த பிரசுரங்கள் மற்றும் புத்தகங்களை வழங்க உங்களுக்கு 125 டாலர் சம்பளம் வழங்கப்படுகிறது. அதே வேலையைச் செய்ய எனக்கு 165 டாலர் கொடுக்கப்பட்டது என்றார்(குறிப்பு : "இன்டர்நேஷனல் பைபிள் பிரஸ்" என்று அழைக்கப்படும் பிலதெல்பியாவின் ஒரு வெளியீட்டு நிறுவனம், மேலே சொன்னதைப்போன்ற ஒரு புத்தகவிற்பனை திட்டத்தைக் கொண்டிருந்தது. அது ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான புத்தகங்களை விற்பவர்களுக்கு மாதம் 125 டாலரை அல்லது அதற்குக் குறைவாக இருந்தால், விற்ற புத்தகங்களில் 40% கொடுக்கப்பட்டது. நம்முடைய சங்கம் அந்த நிறுவனத்துடன் எந்த தொடர்பும் வைத்திருக்கவில்லை). அதற்கு நான் பதிலளித்தேன்; "நீங்கள் தவறாக நினைக்கிறீர்கள், எனக்கு ஒரு சென்ட் கூட(ரூபாய் மதிப்பில், 85 பைசா) சம்பளம் வழங்கப்படவில்லை, ஒரு சென்ட் கூட நான் கேட்டதுமில்லை, எனக்கு ஒரு சென்ட் கூட தேவையுமில்லை. ஏனெனில் இது கர்த்தருக்கு செய்யும் மகிழ்ச்சியும் விருப்பமுமான சேவை" என்றேன். ரஸ்ஸலுக்காக என்று அவர் ஆவேசமாக பதிலளித்தார்.

"மேலும் ஐயா, நீங்கள் கூறுவதுபோல், எந்த சலுகையையும் IBSA வின் எந்த உறுப்பினரும் உங்களுக்கு வழங்கவில்லை. அதை நீங்கள் எனக்கு நிரூபித்தால், உங்களுடைய பெயரில் ஆயிரம் டாலர்களுக்கான காசோலையில் கையெழுத்திட்டுத் தருகிறேன் : பாஸ்டர் ரஸ்ஸலைக் குறித்து நீங்கள் கூறின அனைத்தும் சாத்தானைப்போலவே கீழ்த்தரமானவை, பொய்யானவை" என்றேன். இதற்கு அவர் எந்த பதிலும் சொல்லாமல் அமைதியாகிவிட்டார். நான் சொன்னேன்; "நீங்கள் பாப்டிஸ்ட் சபையின் ஊழியக்காரர் என்றும், தேவனுடைய நாவாக இருக்கிறேன் என்றும் கூறுகிறீர்கள், கர்த்தருடைய வார்த்தை, "ஒருவரையும் தீமையாக பேசவேண்டாம்" (நல்லதாக இருந்தாலும் கெட்டதாக இருந்தாலும்) என்று கூறுகிறதே. நீங்கள் இப்போது கூறின பொய்யானதும் அவதூறுமான வார்த்தைகளில் கிறிஸ்துவின் ஆவியை காட்டுகிறீர்கள் என்று நினைக்கிறீர்களா ? அல்லது சாத்தானின் ஆவியையா ? இரண்டு எஜமானர்கள் இருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும்".

அவர் எந்த பதிலும் கூறவில்லை, அவருடைய முகம் சிவந்திருந்தது. அவருக்கு முன்னால் இரண்டு இருக்கைகளுக்கப்பால் அமர்ந்திருந்த ஒரு பண்பாளர், அந்நபரை அறிந்தவர், நடந்த உரையாடல்களை கேட்டுக்கொண்டிருந்து, "ஜான், உங்களுக்கு கொஞ்சம் சூடான நீர் வேண்டுமா ?" என்று கேட்டார். அதற்கு அந்த நபர், "வேண்டாம், நான் இப்போது சூடானநீரிலிருக்கிறேன்" என்று பதிலளித்தார். இதைக் கேட்டவர்கள் சத்தமிட்டு சிரித்தனர். இது அவரை கோபப்படுத்தியது. அவருடைய முகம் இன்னும் சிவந்தது.நான் அவரிடமிருந்து விடுபடுமுன், "கர்த்தர் உங்களுக்குத் தேவையான சில பாடங்களை கற்றுக்கொடுப்பதற்குள் நீங்கள் இன்னும் சூடான நீரில் இருப்பீர்கள் என்று நான் பயப்படுகிறேன்" என்று கூறி, என் இருக்கைக்குத் திரும்பியவுடன், ஒரு இளைஞன் என்னிடம் வந்து, எனக்கு பணம்கொடுத்து, "நீங்கள் கொடுத்ததுபோன்ற இன்னும் சில துண்டுப்பிரசுரங்கள் உங்களிடமிருந்தால் தாருங்கள்" என்றார். நான் அவரிடம், பணம் எதுவும் வேண்டாம் என்றுகூறி, இலவசமாய் நான் பெற்றேன், இலவசமாய் கொடுக்கிறேன் என்றேன். அவர் நான்கு அல்லது ஐந்து பிரசுரங்களை எடுத்துக்கொண்டு, தனது இருக்கைக்குத் திரும்பினார்.

இன்னொரு இளைஞன் தன்னுடைய பைபிளுடன் வந்து, வெளிப்படுத்தலில் தனக்குப் புரியாத சில விஷயங்களை விளக்கச் சொன்னார். என்முன் அமர்ந்திருந்த ஒரு சகோதரி, IBSA குறிப்புக்களுடன் கூடிய பைபிள் வைத்திருந்தாள், அதைஅவள் எனக்குக் கொடுத்தாள். அதைக்கொண்டு அவருக்கு படித்துக் காட்டினேன். அவர் அந்த பைபிளைப் பார்த்து, அதுபோன்ற ஒன்று தனக்கு வேண்டும் என்று சொல்லி, தன் பெயரையும் முகவரியையும் என்னிடத்தில் கொடுத்தார். நான் அவருக்கு அனுப்பும் சில புத்தகங்களைப் படிப்பதாக உறுதியளித்தார்.

பின்னர் மற்றொரு இளைஞர் தனது பைபிளுடன் வந்தார், அவரை என் அருகில் உட்காரச்சொன்னபிறகு, அவருக்கு முழுமையாகப் புரியாத சில வேத வசனங்களை விளக்கும்படி கேட்டார். அவர் தன் பெயரையும் முகவரியையும் எனக்குக் கொடுத்தார், நான் அவருக்கு சில வேதாகம விளக்கப் புத்தகங்களை அனுப்புவதாக உறுதியளித்தேன். நாங்கள் இருவரும் அட்லாண்டாவில் வசிக்கிறோம், அதைநோக்கி பிரயாணம் செய்கிறோம். நான் வீடு திரும்பியதும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் யுகங்களைப் பற்றின தெய்வீகத்திட்டம், மிஷினரி ரிப்போர்ட் மற்றும் பல துண்டுப் பிரசுரங்களை அஞ்சல் செய்தேன். நேற்று அவர்களில் ஒருவரிடமிருந்து, அவர் யுகங்களைப் பற்றின தெய்வீகத்திட்டம் என்ற புத்தகத்தைப் படித்துவருவதாகவும், மிகவும் ஆர்வமாக இருப்பதாகவும், தற்போது படித்துவருகிறதை முடித்தவுடன், அதிக ஆர்வமாக இருந்தால், ''வாட்ச் டவர் '' க்கு சந்தா செலுத்த நினைத்திருப்பதாகவும் அதில் தெரிவித்திருந்தார். அவரது கடிதத்தின் மையப்பகுதியை கவனித்தபோது, அவர் பாட்டிஸ்ட் சபையில் மிகவும் நம்பிக்கைக்குரிய உறுப்பினராகவும், அதன் பைபிள் வகுப்பில் ஒரு தலைவராகவும் இருப்பதை நான் காண்கிறேன்.

இவை அனைத்தும் ஒரு மனிதனின் தப்பெண்ணம் மற்றும் சத்தியத்திற்கு எதிரான எதிர்ப்பின் விளைவுகளாகும். மேலும் தேவன் மனித கோபத்தை அவரைப்புகழ்ந்துபேச வைக்க எவ்வாறுமுடியும் என்பதை காட்டுகிறது. நான் நிச்சயமாக மரியாதைக்குரியவளாக உணர்ந்தேன். எதிர்பாராதவழியில், விரும்பத்தகாத வகையில் இருந்தாலும், கர்த்தருக்காக சாட்சி கொடுக்கும் வாய்ப்புக்காக அவருக்கு நன்றி தெரிவித்தேன். அந்த பிரசங்கி என்னை துண்டு துண்டாக மெல்லுவதுபோல் பார்த்தார். சில வார்த்தைகள் மௌனமாயிருந்து, பின்பு என்னை விரட்டலாம் என்று அவர் எண்ணியதாக நான் யூகித்தேன், ஆனால் கர்த்தருடைய அன்பின் உதவியுடன் நான் என் நிலைப்பாட்டில் நின்று வெற்றிபெற்றேன். அன்பு சகோதரர்களே, அவருடைய விலையேறப்பெற்ற நாமத்தை மகிமைப்படுத்தவும், அதிகதிகமாக மேன்மைப்படுத்தவும், பிறருக்கு அவருடைய புகழை காண்பிக்கவும் நான் அதிகதிகமாக பயன்படுத்தப்படவேண்டும் என்று எனக்காக ஜெபியுங்கள். ஏனென்றால் கர்த்தரின் சித்தத்தைச் செய்வதில் பிரியமாயிருக்கிறேன். எல்லா வெகுமதிக்கும் மேலான அழியாமை என்ற மகிமையை திரைக்கப்பால் ஆதாயமாக்கவும், என் தேவனோடும் இரட்சகரோடும் என்றென்றைக்கும் இருக்கவும் விரும்புகிறேன்.

ராஜ்யத்துக்கு ஆயத்தமாகும் நேரம் குறைவாயிருப்பதை அதிகதிகமாக உணர்ந்துவருகிறேன். நமக்கு முன்னால் இருக்கும் மாற்றத்தைப் பற்றி நான் நினைக்கும்போது, ஒரு தேவதையின் கனவு நினைவுக்கு வருகிறது. ஆனாலும் புறஜாதியாரின் காலங்கள் முடிவுற்று, புதிய யுகப்பிரிவு தொடங்கப்படுகிறது என்றும் நான் அறிவேன்.

மாம்சத்தின் சுதந்திர பாகத்தைப் பெறுவதற்கு நான் இங்கு இருக்கமாட்டேன் என்பதில் மகிழ்ச்சியாயிருக்கிறேன். ஆனால் திரும்பக்கொடுத்தலின் வேலை துவங்கப்பட்டதைக் காண ஆவலாயிருப்பேன். பூமி ரோஜாவைப்போல் மலருவதைக் காணவும், மீட்டெடுக்கப்பட்ட பரதீசுக்கேற்ற தகுதியான ஆளுநரையும், மனித பரிபூரணத்தையும் காண மகிழ்ச்சியாயிருப்பேன்.

இறந்தவர்கள் திரும்பி வருவதைப் பார்க்கவும், மகிழ்ச்சியின் பாடல்களையும் ஆர்ப்பரிப்பையும் கேட்கவும் நான் விரும்புகிறேன். இவையனைத்தையும் காணக்கூடிய இடத்தில் நாம் இருப்பதும், அதை செயல்படுத்த உதவுவதும், நமது முயற்சிகள் ஞானமானவை என்று அறிந்துகொள்வதும், நம் கர்த்தர் வழிநடத்துகிறார், இந்த பெரிய முயற்சியில் வெற்றிபெறுவார் என்பதும் சுமந்துசெல்லும் ஒரு வாய்ப்பாகும்.

– கிறிஸ்துவின் அன்பான நாமத்தில் உங்களுடைய தாழ்மையான சகோதரி, திருமதி. டாக்டர். E.Y.வாக்கர்( Mrs.Dr. E.Y. Walker) (அவர்களுடைய இராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும் – இந்த கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்'' (சங்**149:8,9**). இந்த சகோதரி பெயர்சபையின் ஒரு இளவரசரைச் சங்கிலியால் கட்டினார் என்று நாங்கள் நம்புகிறோம். கர்த்தர் மேலான விசேஷித்த வாய்ப்புக்களையும், உதவியையும் அளித்து, மற்ற தகுதியுள்ள பரிசுத்தவான்களை கனப்படுத்துவார் என்பதில் ஐயமில்லை).

–––––––

**R 5576**

## தேவதூதர்கள் பாடின பாடலின் நோக்கம்

## THE SCOPE OF THE ANGEL'S SONG

**"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக"–லூக்கா2:14.**

இரட்சகரது பிறப்பின்போது தேவதூதர்கள் பாடின பாடலானது, உலகத்தின் இரட்சிப்புக்கான தேவதிட்டத்தை பார்க்காத சிலரால் கைப்பற்றப்பட்டு, தவறாகப் பயன்படுத்தப்பட்டது. உலகின் மத மாற்றத்துக்குரிய எதிர்பார்ப்பு தோல்வியுற்றதாக காணப்பட்டதால் சோர்வுற்ற இவர்கள், நம் பாடத்தில் இந்த வசனப்பகுதியின் பதிப்பை , தங்கள் சொந்த சந்தேகங்கள் மற்றும் தப்பெண்ணங்களோடு இசைவாக்கி முன்வைத்திருக்கிறார்கள். நம் போதகர் தம் சீஷர்களுக்கு கற்றுத்தந்த, "உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக, உம் சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்ற ஜெபத்தின் நிறைவேற்றத்தில் எந்த நம்பிக்கையும் அவர்கள் காணாததாலும், மிகக்குறைந்த உணர்வை மட்டுமே அடைந்திருப்பதாலும், அதன் அர்த்தம் இழக்கப்பட்டிருக்கிறது. இதனால் அவ்வசனத்தின் பிற்பகுதியை மொழிபெயர்க்க அவர்கள் விரும்புகின்றனர்; "பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக". இதனால் இந்த செய்தியைப் பொருத்தவரை எல்லோருக்குமான இறுதி நன்மையாக நம் நம்பிக்கைகள் இருந்ததானால், நிச்சயமாக ஒளிமங்கச்செய்துவிடும். ஏனெனில் மனுக்குல வரலாற்றில் மிகச் சிலரே இதுவரை இத்தகைய நல்ல சித்தம் உள்ள மனிதர்களாக இருந்து வந்துள்ளனர்.

ஆனால் இது மூலமொழிபெயர்ப்பின் கருத்தாக இருக்கும் என்று நாம் நம்புவதில்லை. மனுக்குலத்துக்கான தேவதிட்டமாக இருக்கும் என்று நாம் தெளிவாக எதை கண்டிருந்தோமோ அதற்கு இசைவாக இக்கருத்து இல்லை. இப்படிப்பட்ட மொழிபெயர்ப்பு முழு உலகிற்கான தேவதிட்டமாகஇருக்கும் என்று நாம் தெளிவாக எதை கண்டிருந்தோமோ அதற்கு இசைவாக இக்கருத்து இல்லை. இப்படிப்பட்ட மொழிபெயர்ப்பு, முழு உலகிற்கான தேவனுடைய இறுதி நன்மையின் கருத்தை நீக்கி, இந்த மகிமையான பாடலின் நோக்கத்தை பெரிதும் குறைக்கிறது. நல்ல விருப்பமாக மனிதன் எதை உணர்கிறானோ அல்லது தனக்குள்ளாக சமாதானத்தோடு இருப்பதற்கு என்ன நல்விருப்பத்தை உணர்கிறானோ அதை மட்டுமே குறிப்பிடுவதாக உள்ளது. எல்லா மனிதருக்குமான இப்படிப்பட்ட வெளிப்பாடு எத்தகைய பயனற்ற நம்பிக்கையாக இருக்கும்! மேலும் இதுவே அதன் சுமையாக இருக்குமானால் தேவதூதர்களின் பாடல் எவ்வளவு சிறியதாக இருக்கும்!

மாறாக, இப்பாடல் தேவ நோக்கத்தின் தீர்க்கதரிசனமாக இருந்து, புதிதாய்ப் பிறந்த குழந்தை மூலமாக சாபம் நீக்கப்பட்டு, சமாதானத்தையும் பாவமற்ற நிலையையும் மனுக்குலத்தாரிடையே ஏற்படுத்தி, அதில் தேவனுக்கும் மனிதனுக்குமிடையே ஒருமைப்பாட்டை கொண்டுவருவதைக் காண்பிக்கிறது. ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டிருந்த தேவசாயலுக்கு மனிதனை மீண்டும் கொண்டுவருவது தேவனுடைய நல்விருப்பத்தின், அவருடைய நல்ல தீர்மானத்தின் வெளிப்பாடாகும். இது நிறைவேறும்போது பூமியெங்கும் சமாதானம் குடிகொள்ளும், ஏனென்றால் இணக்கமின்மைக்– கான காரணங்கள் நீக்கப்பட்டிருக்கும்.

ஏதேனில் நம் முதல்பெற்றோர் தேவனுடைய நீதியின் கட்டளைக்கு கீழ்ப்படியாததால், உலக மனுக்குலம் சாபத்தின்கீழ் அல்லது மரண தண்டனையின்கீழ் வந்தது. ஆகையால் சபிக்கப்பட்ட சந்ததியின் அங்கங்கள், கல்லறையில் முடிவடையும் தண்டனைக்குரிய அடிமைத்தனத்தின்கீழ் வந்தன. இந்த சந்ததி அதிகப்படியான பாவத்தின்கீழ், அதன் பயங்கரமான விளைவுகளைப்பற்றின பாடத்தைக் கற்று வருகிறது. ஆனால் அந்த சாபத்தை நீக்கி, அதன் இடத்தில் ஒரு நிரந்தர ஆசீர்வாதத்தைக் கொண்டுவரவும் தேவன் வாக்களித்திருக்கிறார். இது அவருடைய தயவுக்குத் திரும்புவதையும், அவரோடு முழு இணக்கத்திற்குத் திரும்புவதையும் குறிக்கும்.

**தேவனுடைய மகத்தான திட்டம் முன்னேற்றமடைதல்**

தேவனுடைய முகம் இன்னும் மனிதனை நோக்கித் திரும்பவில்லை, அதாவது தேவனுடைய நன்மையான விருப்பமோ சமாதானமோ இன்னும் வந்திருக்கவில்லையாதலால், இப்பாடலை ஒரு தீர்க்கதரிசனமாகவே நாம் பேசுகிறோம். தேவன் என்ன செய்யத் தீர்மானித்திருக்கிறார் என்பதற்கான அறிவிப்பாக இது உள்ளது. தற்போதைய பாவம் நிறைந்த, கலகம் விளைவிக்கும் மனப்பான்மையிலுள்ள சந்ததிக்கு அவர் நல்லவிருப்பம் கொண்டிருக்கவில்லை. பாவத்தின்மீது அவருக்கு ஒருபோதும் நல்ல விருப்பம் இருந்ததில்லை. தேவன் மனிதன்மீது மரணதண்டனை விதித்தபோது, அவனிடத்தில் தம் நல்ல விருப்பத்தை வெளிப்படுத்தினார் என்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது. மனிதனுக்கெதிரான அவருடைய மனக்கசப்பை தேவனுடைய சாபம் சுட்டிக்காட்டுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவோமானால், மனிதனுடைய பாவத்தின் நிமித்தமாக அவர் அதிருப்தியடைந்தார். அவனது மனப்பூர்வமான கீழ்ப்படியாமையின் நியாயமான தண்டனையாக மனிதன் துன்புறவேண்டுமென அவர் விரும்பினார். தேவன் தம்முடனான ஐக்கியத்திலிருந்து அவனை துண்டித்துவிட்டார். மனுக்குலத்துக்காக மேலும் எதையும்செய்ய அவர் நீதியில் கட்டப்படவில்லை. ஆனால் அவரது எல்லையற்ற இரக்கத்தால் மனுக்குலத்துக்கான மீட்பை அவர் ஏற்பாடு செய்தார்.

மனிதனின் வீழ்ச்சியை அவர் முன்னறிந்து, அவனுடைய மீட்புக்காக உலகத்தோற்றத்துக்கு முன்பே திட்டமிட்டார்.

ஆதாமின் வீழ்ச்சிக்குப்பிறகு, எல்லா யுகங்களிலும் தேவனுடைய திட்டம் மெதுவாகவும் சீராகவும் முன்னேறிவருகிறது. பாவத்தின் தன்மையையும் விளைவுகளையும், வேதனையிலும் கண்ணீர்களிலும், துன்பத்திலும் மனிதர்கள் கற்றுக்கொண்டிருக்கும் அதே வேளையில், தேவன் தம் பரிசுத்தவான்களை, அவரால் தெரிந்துகொள்ளப்படடவர்களை தேர்வுசெய்து வருகிறார். முதலாவதாக தேர்வுசெய்யப்பட்டவர்கள், அவருடைய ஆசீர்வாதத்தின் இராஜ்யத்தில் பூமிக்குரிய பிரபுக்களாக இருக்கப்போகின்றனர். இறுதியாக, ஜீவனுக்கான உயரிய மட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள், தேவனுடைய ராஜாக்களும் ஆசாரியர்களுமாக இருந்து, அனைவரையும் ஆளுகை செய்வர். தேவனால் மிகவும் நேசிக்கப்பட்ட அவரது குமாரன் உலகின் இரட்சகராகவும், தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் பிரதானியாகவும் இருப்பார். ஏறத்தாழ 19 நூற்றாண்டுகளுக்கு முன்பு யூதேயாவின் சமவெளிகளில் கண்காணித்த மேய்ப்பர்களுக்கு இவருடைய பிறப்பை தேவதூதர்கள் அறிவித்தனர்(ஏசாயா 42:1). தெரிந்தெடுக்கப்பட்ட அனைவரும் தேர்வுசெய்யப்பட்டு தயாராக இருக்கும்போது, உலகிற்கான ஆசீர்வாதம் பெரியளவில் ஸ்தாபிக்கப்படும்.''தேவனுடைய புத்திரர் (திருச்சபை) வெளிப்படுவதற்கு சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது. அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்த சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்கு கீழ்ப்பட்டிருக்கிறது'' – ரோமர் 8:19–21.

தேவனுடைய குமாரன் பூமிக்கு வருவது, இந்த மனித சந்ததிக்கு தகப்பனான ஆதாமினால் இழக்கப்பட்ட ஜீவனை மீட்கும்பொருளாக தம்மையே பலிசெலுத்துவதற்கான ஆரம்பஏற்பாடு மட்டுமே. ஆதாமுக்குள் அவருடைய பின்சந்ததியார் அனைவரும் வீழ்ச்சியுற்றிருந்து, நம் கர்த்தர் மனிதனுக்கான ஈட்டுக்கிரயத்தொகையாக மரித்திருந்த போதிலும், தேவதயவு உலகிற்கு வந்திருக்கவில்லை. இயேசு மகிமைநிறைந்த ஒரு தெய்வீக ஜீவியாக மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டார், பின்பு பரத்துக்கேறி ஆவிக்குரிய தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்காக தேவ சமுகத்தில் காணப்பட்டார். இவ்வாறாக தேவதிட்டத்தில் பிந்தினோர் முந்தினோராயினர். இயேசுவின் மரணத்தின் புண்ணியம் முதலாவதாக இவர்களுக்காகவே பயன்படுத்தப்பட்டது. இது மற்ற எவருக்கும் இன்னும் பயன்படுத்தப்படவில்லை. கிறிஸ்துவின் சபை தற்போது, இந்த வாக்களிக்கப்பட்ட சமாதானத்தையும் நல்ல விருப்பத்தையும் பெற்றிருக்கிறது. கிறிஸ்துவின் மூலமாக தேவனோடு உயர்நிலை உறவுக்குள் வந்திருக்கிற, முழு அர்ப்பணிப்பு செய்தவர்களுக்கு மட்டுமே இது அருளப்படுகிறது.

இவர்கள் அனைவரும் தெரிந்தெடுக்கப்பட்டு, ஆயத்தமாக்கப்பட்டு, மகிமைப்படுத்தப்பட்டபிறகு, தேர்வு செய்யப்பட்ட இவர்களுக்கு அருளப்பட்டுவந்த புண்ணியமானது, மற்ற எல்லா மனுஷருக்கும் பயன்படுத்துவதே அடுத்தபடியாக இருக்கும். தேர்வுசெய்யப்பட்ட இவர்கள்மூலமே இப் புண்ணியமானது ஏற்கனவே தகுதியடைந்திருக்கிற முற்பிதாக்களுக்கும் மற்றும் முழுஉலக மனுக்குலத்திற்கும் கொடுக்கப்படுகிறது. இந்த ஆவிக்குரிய வகுப்பார் கிறிஸ்துவின் சரீரஅங்கங்களாகவும், மேசியாவின் இராஜ்யத்தில் அவரோடு உடன்கூட்டாளிகளாகவும் இருப்பதற்காக தேர்ந்தெடுக்கப்–படுகின்றனர். தங்களை முற்றிலும் உண்மையுள்ளோராக நிரூபிக்கிற இவர்கள் அனைவரும் இந்த உயர்த்தப்பட்ட ஸ்தானத்தை அடைவார்கள். ஆவிக்குரிய வகுப்பார் அனைவரும் விரைவில் மகிமைப்படுத்தப்பட்டவுடன், உயிரோடிருக்–கிறவர்களும் மரித்தவர்களுமான முழு உலகத்தின் பாவங்களும், இயேசுவின் தியாகபலிக்குரிய மரணத்தின் தகுதியாகிய புண்ணியத்தை பயன்படுத்துவதன்மூலம் சட்டப்படி ரத்துசெய்யப்படும். பிறகு அவர்கள் மரணத்தீர்ப்பின் சாபத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள், மரணதண்டனை அகற்றப்பட்டிருக்கும். பின்பு அவர்கள் அனைவரும் மாபெரும் மத்தியஸ்தரும், தலையும் சரீரமுமாகிய கிறிஸ்துவினிடத்தில் திரும்புவார்கள். சாபம் நீக்கப்பட்டிருக்கும்.

பிறகு ஆயிரவருட யுகத்தின் மாபெரும் பணி துவங்கி, கிறிஸ்துவின் ஆயிரவருட ஆளுகை முழுவதுமாக படிப்படியாக உயர்த்தப்படும் பணி நடைபெறும். மரித்தோர் படிப்படியாக எழுப்பப்பட்டு, கிறிஸ்துவுக்குள்ளான தேவஇரட்சிப்பின் தெளிந்த அறிவை அடையும்படி கொண்டுவரப்படுவர். அப்பொழுது தேவதூதர்களால் அறிவிக்கப்பட்ட சமாதானம் மற்றும் நல்விருப்பத்தின் ஆசீர்வதிக்கப்பட்ட நிலைமையை அடையும் வாய்ப்பை அனைவரும் பெற்றிருப்பர். அவர்கள் விரும்பினால், பிதாவால் ஏற்றுக்கொள்ளப்படத் தயாராக இருக்கும் இடத்திற்கு படிப்படியாக அவர்கள் கொண்டு வரப்பட்டு, அவரால் அறிமுகப்படுத்தப்படுவர். இராஜ்ஜியத்தின் விதிமுறைகளுக்கும் தேவைகளுக்கும் கீழ்ப்படிபவர்கள் அனைவருக்கும் இது ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட அனுபவமாக இருக்கும். தெளிவான புரிந்துகொள்ளுதலுக்கு கொண்டுவரப்பட்டபிறகும், விருப்பமற்றவர்களாகவும் கீழ்ப்படியாதவர்களாகவும் அவர்கள் தங்களை நிரூபிப்பார்களானால், அவர்களின் மீட்புக்காக தேவனுடைய தரப்பில் முயற்சிசெய்யத் தகுதியற்றவர்களாக, அவர்கள் ''அறுப்புண்டு'', அழிக்கப்படுவார்கள்.

**கிறிஸ்துவின் மரணம் இப்பிரபஞ்சத்துக்கு ஆசீர்வாதம்**

தேவகுமாரனின் தியாகபலியானது, இன்னும் ஜனங்கள் குடியேற்றப்படாத உலகங்களில் வசிப்பவர்களுக்கும்,

பாவத்துடனான எந்த மனிப்பட்ட அனுபவத்தை இன்னும் அடையாதவர்களுக்கும் ஒரு ஆசீர்வாதமாக இருக்கும் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். மனுக்குலம் திரும்பவும் மீட்டெடுக்கப்பட்டு, திருத்தப்பட முடியாதவர்கள் அழிக்கப்பட்டபிறகு, தெய்வீகப் பிரமாணத்தின் மீறுதலை இனியும் தேவன் அனுமதிக்கமாட்டார் என்பது அவரது நோக்கமாக இருப்பதாகத் தெரிகிறது. மெய்யாகவே சாத்தான் தன் வழிவிலகலின் தொடக்கத்தில் தனது சொந்த செயல்முறையின் விளைவுகளை அறிந்திருந்தானானால், அவன் எடுத்த படியை செய்யாதிருந்திருக்கக்கூடும் என்பதை நாம் காணலாம். சாத்தான் இயல்பாகவே முட்டாளாக இருக்கிறான் என்று நாம் நினைக்கக்கூடாது. அவன் ஒரு மகிமைநிறைந்த ஜீவி, லூசிபர், "அதிகாலையின் மகன்". தகப்பன் ஆதாமும், தாய் ஏவாளும் தங்கள் கீழ்ப்படியாமையின் விளைவுகளை முன்னறிந்திருப்பார்களானால், அத்தகைய போக்கை அவர்கள் எடுத்திருக்க மாட்டார்கள். அவர்கள் தங்களது சிருஷ்டிகரின் சாயலில், பரிபூரணமாக சிருஷ்டிக்கப்பட்டிருந்ததால், முன்னறிவுடன் அவ்வாறு செய்திருக்கும்போது, அவர்கள் ஞானமற்றவர்கள், முட்டாள்கள், தெளிந்தபுத்தி இல்லாதவர்கள் என்று அர்த்தமாகியிருக்கும்.

தங்கள் ஆதி மேன்மையைக் காத்துக்கொள்ளாத தேவதூதர்கள் ஆரம்பத்திலேயே முடிவை அறிந்திருந்தார்களானால், அவர்கள் யுகங்களை நோக்கிப்பார்த்து, தங்கள் பாவம் மற்றும் கீழ்ப்படியாமையின் மோசமான விளைவுகளைக் கண்டிருந்து, திகைத்துப் போயிருப்பார்கள். அத்தகைய பேரழிவு ஏற்படுத்தும் நடவடிக்கையை எடுத்திருக்கமாட்டார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். அவர்கள் பாவத்தில் மூழ்கி அப்படிப்பட்ட பாவம் நிறைந்த மனப்பான்மைகள், சார்பு நாட்டங்கள், விருப்பங்களை வளர்த்துக் கொண்டனர் என்பது உண்மையே, அவர்கள் இப்போது அறிந்த அளவுக்கு முன்கூட்டியே அறிந்திருந்தார்களானால் அவர்களுடைய வழி இதுவாக இருந்திருக்கும் என்பதற்கு எந்த ஆதாரமுமில்லை. தற்போது சமீபித்துள்ள அவர்களது நியாயத்தீர்ப்புநாளில், முறையாக மனந்திரும்புவார்களானால், இவர்களில் சிலர் மீட்கப்படக்கூடும் என்பது நம் நம்பிக்கை.

தேவன் தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியிலும் சத்தியத்திலும் தொழுதுகொள்ளவேண்டும் என்று விரும்புகிறார். நம்மைச்சுற்றிலுமுள்ள இந்த உலகங்கள் அனைத்தும் இன்னும் சிருஷ்டிக்கப்படாத பல புத்திக்கூர்மையுள்ள ஜீவிகளுக்கான வீடுகளாக இருக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளன என்பது எங்கள் கருத்து. பல்வேறு மட்டங்களில் ஜீவிக்கின்ற பல உயிரினங்களுக்கு மகிழ்ச்சியையும் ஆசீரையும் அளிப்பது தேவனுக்குப் பிரியம் என்று நாம் நம்புகிறோம். பாவத்துடனான மனுக்குலத்தின் அனுபவத்தை ஒரு மதிப்புமிக்க பாடமாக தேவன் ஆக்குகிறார், இந்தப் பாடம் அவர்களுக்கு மட்டுமல்ல, ஜனங்கள் எப்போதும் வசிக்கும் அனைத்து உலகங்களுக்கும் நன்மை பயக்கும். பாவத்தின் இயல்பு மற்றும் போக்கு என்ன என்பது குறித்து அவர்களுக்கு முன்கூட்டியே அறிவுறுத்தப்பட்டு, தெரிவிக்கப்படலாம். பாவத்தின் போக்கின் கதையை – அது பூமியின் ஜனங்களுக்கு என்னசெய்தது, அவர்களை சீர்ப்படுத்தி மீட்டெடுக்க என்ன விலை கொடுக்கப்படவேண்டும் என்று அவர்களுக்கு சொல்லப்படும். பாவமானது மனதையும், சரீரத்தையும், ஒழுக்கங்களையும் இழிவுபடுத்துகிறது என்றும், அதன் செல்வாக்கு சீரழிவைக் கொண்டுவரும் என்றும், அது ஒருமுறை சீரழித்துவிடுமானால் அது கொண்டுவரும் அனைத்து துன்பங்களையும் அவமானங்களையும் மீறி, ஒருவர் பாவத்தை விரும்புகிறார் என்றும், அவர்கள் அதோடு மகிழ்ச்சியுடன் ஒத்துழைப்பதால், அப்படிப்பட்டவர்களுடைய சொந்த விருப்பத்துக்கு எதிராக, தேவன் ஒருபோதும் தன செல்வாக்கை செலுத்தமாட்டார், அப்படிப்பட்ட எவருக்கும் ஒருபோதும் அவர் நித்திய ஜீவனை அருளமாட்டார்.

அப்படியானால், கல்வாரியில் நிறைவேற்றப்பட்ட மகத்தான பணி, இப்பிரபஞ்சம் முழுவதும் பரந்த செல்வாக்கைக் கொண்டிருக்கும் என்று தோன்றுகிறது. இக்கருத்தை, "உன்னதத்தில் தேவனுக்கு மகிமை" என்ற தேவதூதர்களின் பாடலிலுள்ள முதல்பகுதிக்குப் பொருத்தலாம். எல்லா தேவதூதர்களாலும், ஒவ்வொரு தரவரிசையிலுள்ள ஆவிக்குரிய ஜீவிகளாலும் தேவன் மகிமைப்படுத்தப்படுவார். தெய்வீக சுபாவத்துக்கு உயர்த்தப்பட்ட தம் திருச்சபையாலும், மீட்டெக்கப்பட்ட மனுக்குலத்தாலும், ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள புத்திக்கூர்மையுள்ள எல்லா சிருஷ்டிப்புக்களாலும், ஒவ்வொரு யுகத்திலும் தேவன் மகிமைப்படுத்தப்படுவார். ஆம்! நித்தியத்தின் ஆண்டுகள் கடந்துபோகும்போதும், மற்ற கிரகங்களிலுள்ள வேறு ஜனங்கள் உருவாக்கப்பட்டு அவரை அறிந்துகொள்ளவும், அவரை நேசித்து அவரது அற்புதமான அருட்கொடைகளையும் ஆசீர்வாதங்களையும் பகிர்ந்துகொள்ளும்போது, அவருக்கு ஊழியம் செய்வதன் ஆசீர்வாதத்தைக் கற்றுக்கொண்டு, அவரது கனம், மதிப்பு இன்னும் அதிகதிக மகிமை நிறைந்ததாகும்.

––––––